Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-05 | 21-10-2004 | வியாழக்கிழமை | ஓசை -246

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10478)



# பேச்சுவார்த்தை மீதான நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து வருகின்றனர்!

## ஒஸ்லோ சந்திப்பில் பீற்றர்சன்னிடம் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

**விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமிழ் மக்கள் சமாதானப் பேச்சுக்கள் மீதான நம்பிக்கையை இழந்து வருவதுடன் தெற்கில் சமாதான எதிர்ப்புக்கொள்கைகள் தீவிரமடைந்து வருவதையிட்டு விடுதலைப்புலிகள் கவலையடைந்துள்ளதாகவும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர் சன்னுக்குக் கூறியுள்ளார் என ஒஸ்லோ தகவல்கள் தெரிவிக்கின்றன.**

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான குழுவினர் நோர்வேயின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் முற்பகல் 10.00 மணியளவில் ஜான் பீற்றர் சன்னைச் சந்தித்தனர். பின்னர் நோர்வேயின் பிரதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விதார் ஹெல்கேசன், விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

பிற்பகல் 3.00 மணியளவில் எஸ்.ஏ.எஸ் ரடிசன் விடுதியில் தமிழ்ச்செல்வன் நோர்வே, சர்வதேச ஊடகங்களிற்கான செய்தி (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் இராணுவக் கப்டன் தெகிவளையில் சுட்டுக்கொலை

கொழும்பு தெகிவளையில் முன்னாள் இராணுவ கப்டன் மொகமது ஹசீன் நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வாகனத்தில் சென்று கொண்டிருந்த சமயம் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இராணுவப் புலனாய்வுத்துறையில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் பணியாற்றிய இவர், இவரது சில நடவடிக்கைகள் காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டார். பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடைய சம்பவங்கள் காரணமாக இக்கொலை இடம் பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவரின் கொலை தொடர்பாக விசாரணைகள் தொடர்வதாக தெகிவளைப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இந்தசம்வத்தில் கொல்லப்பட்டவரின் நண்பர் ஒருவரின் சம்பந்தம் இருப்தாக தாம் சந்தேகிப்பதாகவும் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர். (32)

### வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரை நீக்கமும்

வலித் தூண்டல், கீரிமலையைச் சொந்த இடமாகவும் உடையார்கட்டுத் தெற்கை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கப்டன் அப்பன் (அரியதாஸ் அலெக்ஸ் வினோதன்), 12.07.2000 அன்று இலங்கைக் கடற்படையினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார். இவரது திருவுரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் குடும்பஸ்தர் மரணத்திற்கு விடுதலைப்புலிகள் அனுதாபம் தெரிவிப்பு

தேசத்துரோகி கருணா கும்பலின் துப்பாக்கிச்சூட்டில் பலியான முஸ்லிம் குடும்பத்தருக்கு விடுதலைப்புலிகள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வனவளப்பிரிவினரின் அறிவுறுத்தலின் பிரகாரம் காடுகளில் மரங்கள் வெட்டுதல் அல்லது அதற்கு துளை போடுதல் போன்ற நடவடிக்கைகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதென ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளால் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இவ் எச்சரிக்கை அறிவுறுத்தலை உதாசினப்படுத்தி அண்மைக் காலங்களில் காடழிப்பு நடவடிக்கைகளில் அநேகர் ஈடுபட்டு வந்தனர். இதனால் வாதனேரி எல்லைப் புறப்பகுதியில் பனைவளம் அழிக்கப்பட்டு வந்தது.

இதைத்தடுப்பதற்கு அண்மையில் விடுதலைப்புலிகள் நட (12 ஆம் பக்கம் பார்க்க)

### ஒத்திகை

கட்டுநாயக்க வானூர்தி தளத்தில் வானூர்தி விபத்து ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் ஏற்பாடுகள் தொடர்பில் நேற்று ஒத்திகை ஒன்று நடத்தப்பட்டது இதன் போது வான் படையினர், தீயணைப்புப் படையினர், மற்றும் வானூர்தி மைய ஊழியர்கள் பங்கேற்றனர்

இதனை முன்னிட்டு கட்டுநாயக்கா முதல் கொழும்பு வரையில் அவசரசேவைப் பிரிவுகள் தயார்படுத்தப்பட்டிருந்தன.(32)

-சிறில. கடற்படையின் அச்சுறுத்தலின் மத்தியில்-

## வல்வெட்டித்துறை கடற்கரை ஓரத்தில் படகுகளை ஒதுக்க வான்தோண்டல்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படையினரது அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது வடமராட்சி வல்வெட்டித் துறை மீனவர்கள் கடற்கரை ஓரத்தில் படகுகளை ஒதுக்குவதற்கான வான்களைத் தோண்டும் பணியில் நேற்று ஈடுபட்டுள்ளனர்.வடமராட்சியில் வல்வெட்டித்துறை கடற்கரைகளில் கடற்றொழில் படகுகளை நிறுத்தி வைப்பதற்கான வான்களை தோண்டுவதற்கு ஏற்கனவே படையினரால் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் வான் தோண்டும் பணியை ஆரம்பித்தனர். இதனையடுத்து அங்கு வந்த கடற்படையினர் தமது பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு மேற்படி கடற்கரைகளில் வான் தோண்ட அனுமதிக்க மறுத்துவிட்டனர். இதனால் அப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

### விபத்தில் காயம்

(வடமராட்சி)

முகமாலையிலிருந்து யாழ். நோக்கிச் வந்து கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்து ஒன்றும், யாழிலிருந்து முகமாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்றுமே விபத்துக்குள்ளாகின. இவ்விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். (27)

## வெவ்வேறு சம்பவங்களில் 3 நாட்டுப்பற்றாளர்கள் வீரச்சாவு

17.10.2004 அன்று மட்டு அம்பாறை மாவட்டம் புதூர் பகுதியில் தேசத்துரோகி கருணா குழுவினரால் சுடப்பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்-தினேஸ்

(குமாரசூரியம்-மகேஸ்வரன் 8ஆம் வட்டாரம் புதூர் மட்டக்களப்பு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

17.10.2004 அன்று மட்டு அம்பாறை மாவட்டத்தில் ஊறணிப்பகுதியில் தேசத்துரோகி கருணாகுழுவினரால் சுடப்பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்-பாசியரட்ணம்(புவனசிங்கம்-பாசியரட்ணம் நாவற்காடு கரவெட்டி, ,மட்டக்களப்பு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

- இந்தியப் படையினரால் -

## யாழ் மருத்துவ மனையில் கொல்லப்பட்ட பொது மக்கள் நினைவு நிகழ்வுகள்

யாழ்.போதனா வைத்தியசாலையினுள் வைத்து இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களது நினைவு தினம் இன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்நினைவு தினத்தை ஒட்டி யாழ்.போதனா வைத்தியசாலையில் விசேட நினைவு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். இதில் பொது மக்கள் வைத்தியசாலை அதிகாரிகள், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (33)

## இளைஞன் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை அன்புவழிபுரத்தில் இனந்தெரியாதோரால் இளைஞர்ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 7.50 மணியளவில் நடந்த இந்தச்சம்பவத்தில் கிறிஸ்துப்பிள்ளை லோகநாதன் (வயது25) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் வசித்துவந்த இவர் கடந்த இரண்டுமாதகாலமாக அன்பு வழிபுரத்தில் வசித்து வந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

## யாழ்.கைதடிப் பகுதியில் பேருந்து குடைசாய்ந்ததில் 20 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடிப்பகுதியில் நேற்று முற்பகல் பயணிகள் பஸ் ஒன்று குடைசாய்ந்ததில் அதில் பயணம் செய்த 20 பேர் காயமடைந்துள்ளனர். கைதடி ஊடாகச் செல்லும் கண்டி வீதியால் முகாமாலைப் பகுதியில் இருந்து நிறைந்த பயணிகளுடன் யாழ்.நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்து சாரதியினது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் குடைசாய்ந்தது. இச்சம்பவத்தில் 20 பேர் காயமடைந்தாலும், விபத்தில் காயமடைந்த நடத்துனர் உள்ளிட்ட அறுவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நடத்துனரான சி.கண்ணன் (வயது 19) மற்றும் சுதந்திரபுரம் உடையார்கட்டுப்பகுதியைச் சேர்ந்தவர்களான க.கணேசலிங்கம் (வயது40) திருமதி எஸ்.இராசம்மா (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் அரச உத்தியோகம் நற் பண்புகளுடைய 28 வயது திருவாதிரை நட்சத்திர மணமகனுக்கு அழகிய நற்பண்புகளுடைய மணமகள் தேவை "புதியபாலம்" தபால் பெட்டி இல.10 வவுனியா (5203)

### தவறிவிட்டது

இல.12 ஆனந்தன் வடலி வீதி, அரியாலை "யாழ்ப் பாணத்தை முகவரியாகக் கொண்ட தருமராஜா கஜேன் என்பவரது தேசிய அடையாள அட்டை தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லதுT.P 228-5947இல்தொடர்பு கொள்ளவும். (5189)

### ஆங்கில ஆசிரியர் றஜித் கௌரவிப்பு

குறைந்த காலப்பகுதியில் ஆங்கிலத்தில் எழுத வாசிக்கப் பேச ஏற்படுத்திய ஆசிரியர் றஜித் என்பவரை மாணவர்கள் கௌரவித்துள்ளனர். இந்நிகழ்வு புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. (5196)

### தவறிவிட்டது

19.10.2004 மல்லாவிக்கும் பட்டுப்பூச்சி சந்திக்கும் இடையில் கைச் சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மல்லாவி சாலினி குளிரூட்டில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (4139)

# மின்இணைப்புப் பயிற்சியினை பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ்

(அலுவலக செய்தியாளர்)
நிகொட் நிதியுதவியுடன் உலக கனேடிய பல்கலைக்கழகசேவை பூஸ்க் (Musc) ஆதரவில் தமிழர் புனர்வாழ்வுக்கழக மைய நிறுவனங்களில் ஒன்றான கிளிநொச்சி பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் (REERDO) நடைமுறைப் படுத்தப்பெற்ற மின் இணைப்புப் பயிற்சியினை நிறைவு செய்த மாணவர்களுக்கான மின் இணைப்பு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று தருமபுரம் றீடோ பயிற்சி நிலையத்தில் நடை பெற்றது

மேற்படி நிகழ்வில் பூஸ் நிறுவன வடமாகாணத்திற்கான திட்ட இணைப்பாளர் ஜெயராஜசிங்கம், றீடோ நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஜீவன், கிளிமுல்லை மாவட்ட பூஸ் நிறுவன திட்ட இணைப்பாளர் சீலன் ஆகியோர் கலந்து கொண்டு மின் இணைப்புப் பயிற்சியினை நிறைவு செய்த 27பேருக்கு மின்இணைப்புக்கான உபகரணங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இன்று முல்லை பாலிநகரில் உள்ள றீடோ நிறுவனத்தின் கட்டடவேலை (மேசன்) தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பெறவுள்ளது. சோ)

# திருவையாறு பகுதி -2கிராமத்தில் பொதுமண்டபத்திற்கு அடிக்கல்நாட்டல்

கிளிநொச்சி திருவையாறுப் பகுதி இரண்டு கிராம மக்கள் அமைக்கும் பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று நடைபெற்றது.



அக்கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அமைக்கப்படவுள்ள இப் பொது மண்டபமானது கிராமத்தின் பொது மைதானத்தில் அமையவுள்ளது. அக்கிராம மக்களால் அமைக்கவுள்ள இக்கட்டடத்திற்கான அடிக்கல்லினை கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர்,கரைச்சிப் பிரதேசசெயலர் விவசாயதிணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் வருகைதந்து அடிக்கல் நாட்டினர். இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக மகங்கல விளக்கை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி அவர்களும், விவசாய திணைக்கள உத்தியோகத்தரும் கிளி.மாவட்டமேலதிக அரசாங்க அதிபரும் கரைச்சிப்பிரதேச செயலாளரும் செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி அவர்களும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்துஅடிக்கல் நாட்டுவிழாவினையடுத்து சிறப்புரைகளை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் அப்பகுதிக் கிராமிய பொறுப்பாளர்,செஞ்சோலை மகளிர் பொறுப்பளர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ச.தீ)

# பொன்னம்பலம் மருத்துவமனையில் விசேஷ சிகிச்சையும் ஆலோசனையும்

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் விசேஷ சிகிச்சையும் ஆலோசனையும் நோர்வே நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் சிறுநீரகப் பொது வைத்திய நிபுணரால் இன்று முதல் 26ஆம் திகதி செவ்வாய் கிழமை வரை காலை 8மணியிலிருந்து மாலை 4மணிவரை வழங்கப்படும் பயன்பெற விரும்பும் நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

### பிற்போடல்

ஒக்ரோபர் 22ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவ்ரை நடைபெறவிருந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது இது ஒக்ரோபர் 27ஆம் திகதி முதல் நவம்பர் முதலாம் திகதி வரை ஆறுநாட்கள் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி வலையக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் அறியத் தந்துள்ளார்.

### மன்னார் பி.செயலகத்தில் நேற்று வாணி விழா

மன்னார் நகர பிரதேச செயலகத்தில் 2004ஆம் ஆண்டுக்கான வாணி விழா நேற்று இடம் பெற்றது.

ஆரம்பப் பூசைகள் இடம் பெற்ற பின்னர். கலைநிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன.

இன நிகழ்வின் போது வர வேற்புரையினை மன்னார் உதவிப் பிரதேச செயலாளர் கேதீஸ்வரன் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து ஆசியுரை யினை உப்புக்குள இந்து ஆலயக்குருக்கள் ஆற்றினார்.

சிறப்புரையினை மன்னார் பிரதேச செயலாளர் வரதீஸ் ஆற்றினர் இறுதியாக நன்றியுரை யிரைனை. மேற்படி பிரதேச செயலாத்தின் கணக்காளர் எஸ்.எம்.சிவரூபன் அவர்கள்ஆற்றினார். (மி)


## தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்

டிப்ளோமா பாடநெறிகள் தமிழ் விளக்கங்களுடன்



Diploma in MS Office

Diploma in Computer Programming

Diploma in Desktop Publishing

Diploma in Web Design

Diploma in Computer Studies

Diploma in Computer Programming

இப்பாடநெறிகளுக்கான காலம் 4 மாதங்கள்

கணினி மொழிகளான

**C, C ++, Visual Basic**

ஆகிய பாடங்கள் 25/10/04 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. பதிவுகள் 20/10/04 முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.


கணினியியல் கல்லூரி - The Computer Collage

(Affiliated to Asian Computers)

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10581)


## பாராட்டி அகமகிழ்கின்றோம்



றோயல்
சிறுவர்பாடசாலை இல.53
கனகபுரம்,கிளிநொச்சி.

குமார் -புவனேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வன் செல்வன் கு. கீர்த்தனன்.

2004ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் சகல கலைகளிலும் மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்

மாமா,மாமி, பிள்ளைகள்.
அருள்செல்வன் அனுசா ஜீவகன்,
சங்கவி.

(5206)

## துயர் பகிர்கிறோம்

13.10.2004ஆம் திகதி அன்று கற்சிலைமடுப் பகுதியில் மின்னல தாக்கி அகாலச் சாவடைந்த எமது பாடசாலைப் பணியாளர் திரு.செ.மயில்வாசன் அவர்களின் சகோதரன்

**விஜயரட்ணம் சுதர்சன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திக் கின்றோம்.

தகவல்,
அதிபர், ஆசிரியர்,
பணியாளர்கள்,மாணவர்கள்

யோகபுரம் மகாவித்தியாலயம்
(4138)

## திருவையாறு ப.வா.தி.வி.நு.கூ. சங்கம்-கிளிநொச்சி

அன்புடையீர்!

### வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம்

30.10.2004

மேற்படி திருவையாறு வி.நு.கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் 10.10.2004ஆம் திகதி ஈழநாதம் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டபடி 30.10.2004ஆம் திகதி காலை 9.00 மணிக்கு, திருவையாறு மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு.இ.பொன்னம்பலநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும். எனவே இச் சங்கத்தின் (வாக்களிக்கத் தகுதியுடைய) அங்கத்தவர்கள் அனைவரும் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின் றோம்.

குறிப்பு:- (வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் 24.10.2004 ஆம் திகதி ஈழநாதம்பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும்)

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
க.வீரசிங்கம்,
செயலாளர்.

(5207)

## முக்கிய அறிவித்தல்

மாந்தை கிழக்குப் பிரதேசசபை
நட்டாங்கண்டல்

மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதியில் அரச/தனியார் நிறுவனங்களினதும், தனிப்பட்டவர்களினதும், கட்டப்படும் எவ்வகையான கட்டட வேலைகளுக்கும் எமது அனுமதியினைப் பெற்ற பின்பே வேலைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

திருமதி.ச.சிறிஸ்கந்தராசா,
விஷேட ஆணையாளர்,
மாந்தை கிழக்கு,
பிரதேசசபை,
நட்டாங்கண்டல்.

(சி-10280)

# இந்தோனேசியாவின் புதிய சனாதிபதியாக யுதொயொனோ நேற்றுப் பதவியேற்பு

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவின் புதிய சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுசிலோ பாம்பங் யுதொயொனோ நேற்று சனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.**

55 வயது நிரம்பியவரும், பொருளாதாரத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான யுதொயொனோ இந்தோனேசியாவில் தீவிரவாத இயக்கத்தைத் தடைசெய்யும் வகையில் கடும் சட்டங்களைக் கொண்டுவர வேண்டியிருக்குமென்றும் தெரிவித்தார்.


கடந்த 2 வருட காலத்தில் இந்தோனேசியாவில் 200 இற்கும் அதிகமானோர் தீவிரவாதத் தாக்குதல்களின் காரணமாக இறந்துள்ளனர். இவர்கள் அனைவரும் வெளிநாட்டவர்கள் என்றும் யுதொயொனோ கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் நேற்றுக் காலை ரைம்ஸ் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் முதலிடத்தைப் பெறுமென்று தெரிவித்ததுடன், பயங்கரவாத சட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு பாதுகாப்பு அமைப்புகள் பலப்படுத்தப்படும் என்றும், மேலும் லஞ்சஊழல் தமது நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பலமான சனாதிபதி செயலகம் ஒன்றை யுதொயொனோ அமைப்பாரென்றும், தேசிய பாதுகாப்புச் சபை, பொருளாதார ஆலோசனைச் சபை என்பன உருவாக்கப்படுமென்றும் தொடர்பாடல் திணைக்களமொன்றும் தனியாக அமைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாக்தாத்தில் விமான நிலையத்துக்குச் செல்லும் பாதையில் நேற்று கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதல் நடைபெற்ற இடத்தை சுத்திகரிக்கும் அமெரிக்கப் படைவீரர்கள். இதில் நால்வர் காயமடைந்தனர்.



தென்கர்க்ஸ்வில் காட்டுப்பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகி எரியும் மக்லியோ விமானத்தின் ஒரு பகுதி.

### கமீர் கர்ஷாய் தொடர்ந்தும் முன்னிலை

ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற முதலாவது நேரடி சனாதிபதித் தேர்தலில் இதுவரையிலும் எண்ணப்பட்ட வாக்குகளினடிப்படையில் கமீர் கர்ஷாய் 63 சதவீத வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் இருக்கின்றார்.

அவரை எதிர்த்துப் போட்டியிடும் யூனுஸ் 17 சதவீத வாக்குகளைப்பெற்று 2 ஆம் இடத்திலும் அப்துல் ரசீட் 7 சதவீத வாக்குகளைப்பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளார்கள்.

ஆப்கானிஸ்தான் சனாதிபதித் தேர்தலில் மொத்தம் 18 வேட்பாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# பதவி நீக்கப்பட்ட மியான்மார் பிரதமர் வீட்டுக் காவலில்!

மியான்மார் நாட்டின் பிரதமர் கின்நியுன்ட் ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாகப் பதவி விலக்கப்பட்டு, வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பர்மா என்று முன்பு அழைக்கப்பட்ட மியான்மார் நாட்டில் 1962 முதல் இராணுவ ஆட்சியே நடைபெற்று வருகின்றது.

இதனை எதிர்த்து அந்நாட்டில் நடைபெற்ற சனநாயகப் புரட்சியை ஒடுக்கிய இராணுவ ஜெனரலான கின்நியுன்ட் மியான்மார் நாட்டின் பிரதமர் ஆனார்.

சர்வதிகாரி ஆட்சி நடத்தி வந்த அவர், பதவியில் நீடிப்பதற்காக மியான்மாரில் சனநாயக ஆட்சியைக் கொண்டு வரப் போவதாகக் கூறியிருந்தார்.

இந்நிலையில் ஆட்சியில் இராணுவ உயர் அதிகாரிகளின் தலையீடு அதிகமானது.

பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. அவரைப் பதவி விலக வேண்டுமென்று இராணுவ உயரதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்குப் பிரதமர் மறுப்பு தெரிவித்ததையடுத்து, பிரதமர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட பிரதமர் தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனை மியான்மாரிலுள்ள தூதரகங்களும் அயல்நாடான தாய்லாந்தும் உறுதி செய்துள்ளன.



கம்போடியாவில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு சூழல் பாதுகாப்புத் திணைக்களம் தடைவிதித்திருக்கும் நிலையில் மீள் உற்பத்திக்காக குப்பைகளில் பிளாஸ்டிக் பொருட்களைத் தேடும் கம்போடிய சிறுமி.

# அமெரிக்காவில் சனாதிபதித் தேர்தலுக்கு முற்கூட்டியே வாக்குப்பதிவு ஆரம்பம்

## -நெருக்கடிகளைத் தவிர்க்க முன்நடவடிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் சனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு திங்கட்கிழமை தொடங்கியது. அமெரிக்காவில் தேர்தல் நாளான நவம்பர் 2 இற்கு முன்னதாகவே வாக்களிக்கத் தொடங்குவதற்கு 24 மாநிலங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நாளன்று நீண்ட வரிசைகளில் பொது மக்கள் நெடுநேரம் காத்திருப்பதைத் தவிர்ப்பதற்காக இந்த முறை பின்பற்றப்படுகின்றது. ஆனால் திங்கட்கிழமையே பெருமளவில் வாக்காளர்கள் திரண்டதால் நெடுநேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பலர் வாக்களிக்கமால் திரும்பினர். வாக்குச்சாவடி ஒன்றில் கணினி இயந்திரம் பழுதுபட்டது. சில இடங்களில் வாக்குச்சீட்டுகளில் முழு விபரங்கள் இல்லை எனப் பொது மக்கள் புகார் தெரிவித்தனர்.

கணினி வாக்குச்சீட்டு ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி வாக்களிக்க மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு பல நாட்கள் நடைபெறுவதால் மோசடிகள் நடைபெற வாய்ப்புகள் அதிகரிக்குமென விமர்சகர்கள் கருதுகின்றார்கள். கணினி முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவது குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்தார்கள். வாக்குச்சீட்டையே பயன்படுத்துமாறு அவர்கள் மக்களைக் கேட்டுக் கொண்டனர். டெக்ஸாஸ், கொலறாடோ, அர்க்கண்சாஸ் ஆகிய மாநிலங்களிலும் வாக்குப்பதிவு திங்கட்கிழமை தொடங்கியது. இயோவா, நெவேடா, புதுமெக்சிக்கோ ஆகிய மாநிலங்களில் வாக்குப்பதிவு ஏற்கனவே தொடங்கிவிட்டது.

# மத்திய ஆசிய கூட்டுறவு அமைப்பில் ரஷ்யா இணையத் தீர்மானம்

(மொஸ்கோ)

மத்திய ஆசிய பொருளாதார கூட்டுறவு அமைப்பில் ரஷ்யா இணைகிறது. எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த அமைப்பில் இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார் ரஷ்யா அதிபர் புஷ். இந்த அமைப்பில் ரஷ்யா சேருவதற்கு கடந்த மே மாதத்திலேயே கஜகஸ்தான், கில்கிஸ்தான், தஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியவை தெரிவித்திருந்தன. மண்டல அளவிலான பொருளாதார உறவு தவிர இந்த அமைப்புத் தீவிரவாத்திற்கு எதிரான நடவடிக்கை போதைப்பொருள் கடத்தல் தடுப்பு உட்படப் பல்வேறு விஷயங்கள் பற்றிக் கூடி ஆலோசனை நடத்தும்.

# இந்திய விரோத செயல்களுக்கு பூட்டான் இடமளிக்க மறுப்பு

(திம்பு)

பூட்டான் தனது பிரதேசத்திலிருந்து தனிநபர்களையோ, தீவிரவாதக் குழுக்களையோ இந்திய விரோத நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்காதென்று உறுதி கூறியுள்ளது. பொதுவான எல்லைகளில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து இரு நாடுகளின் அதிகாரிகளுக்கிடையே அதிக உளவுத் தகவல் களைப் பரிமாறிக்கொள்ள வேண்டுமென்று பூட்டான் வலியுறுத்தியுள்ளது.

# சந்தனக் கடத்தல் வீரப்பனின் மரணத்தில் தமிழக செய்தி ஊடகங்கள் சந்தேகம்!

(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பனின் மரணத்தில் தமிழக செய்தி ஊடகங்கள் சந்தேகத்தினை வெளியிட்டுள்ளன. மரணமான வீரப்பனின் சடலத்தில் காணப்பட்ட தன்மைகளை வைத்து இச் சந்தேகங்களை வெளியிடப்பட்டுள்ளன.

வீரப்பனின் உடலில் இடது கண் அருகே நெற்றியில் ஒரே ஒரு குண்டு மட்டுமே பாய்ந்திருப்பதாக படத்தில் தெரிகிறது. பொலிசார் சரமாரியாக சுட்டபோது ஒரு குண்டு மட்டுமே பாய வாய்ப்பில்லை. அவர் உடலில் பல குண்டுகள் துளைத்திருக்கும் என்று கூறப்படுகிறது. எனவே துப்பாக்கிச் சண்டையில் வீரப்பன் இறந்திருப்பார் என்பது ஏற்க இயலாத நிலையில் உள்ளது.

வீரப்பனும் கூட்டாளிகளும் வானில் வந்தபோது அதிரடிப் படையினர் கூறுகின்ற படி சாரதி வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே குதித்து ஓடினார். உடனே பொலிஸ் அதிரடிப்படையினர் வானைச் சுற்றி வளைத்ததை அறிந்த வீரப்பன் இனித் தப்பிக்க இயலாது என்பதை உணர்ந்து, துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகவும், அதைத் தொடர்ந்து சேத்துக்குழி கோவிந்தனும் தன்னையே சுட்டுக்கொண்டதாகவும் இந்தத் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதும் அதிரடிப் படையினர், வீரப்பன் பொலிசாரைத் தாக்கத் தொடங்கிவிட்டதாக எண்ணி, வானை நோக்கி சரமாரியாகச் சுட்டனர் என இன்னொரு தகவல் கூறுகிறது.

அதிரடிப்படையினர் சரமாரியாக வானைச் சுட்டு ஜல்லடைக் கண்களாக ஆக்கியபோது , குண்டுமழையின் இடையே சிக்கிய வீரப்பனின் உடலில் ஒரேயொரு குண்டு மட்டுமே பாய்ந்தது என்று கூறுவது சந்தேகத்தைக் கிளப்புவதாக உள்ளது. அந்தக் குண்டு வீரப்பன் துப்பாக்கியில் இருந்து வந்ததா? அல்லது அதிரடிப்படையினர் துப்பாக்கியில் இருந்து வந்ததா? என்பது பிரேத பரிசோதனை அறிக்கையில்தான் தெரியவரும் அதன் பிறகுதான் வீரப்பன் தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது பொலிசார் சுட்டுக்கொன்றார்களா? என்பதும் தெரியவரும்.

இதற்கிடையே மற்றொரு பரபரப்பான தகவலும் வெளிவந்துள்ளது. வீரப்பன் சுட்டுக் கொல்லப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே அவரை அதிரடிப் படையினர் சுற்றிவளைத்துப் பிடித்து விட்டதாகவும், அவருக்கு நீரிழிவு நோய் , கண்பார்வை மங்குதல் போன்ற நோய்கள் இருந்ததால் நடக்கமுடியாத நிலையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொலிஸ் வானிலேயே மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனராம். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது அடையாளம் தெரியாமல் இருக்க வீரப்பனின் முறுக்கு மீசையை கட் செய்துள்ளதாகவும், மருத்துவ மனையில் சிகிச்சை அளித்த போது அவர் பல்வேறு தகவல்களை வெளியிட்டதாகவும் இதனால் பல உண்மைகள் அம்பலத்திற்கு வரலாம் என்ற காரணத்தினால் அவரை உயிரோடு விட்டுவைக்கக் கூடாது என்று மேலிட உத்தரவின் பெயரில் சுட்டுக்கொன்றதாகவும் ஒரு தகவல் கூறுகிறது. மேலும் சமீப நாட்களாக பொலிஸ்துறையை உலுக்கிவரும் ஜெயலட்சுமி விவகாரத்தை அடியோடு திசைதிருப்ப இந்த நடவடிக்கை அவசர அவசரமாக அரங்கேற்றப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

-கடற்கரும்புலி மேஜர் சிறி

# ஞாபகார்த்த மருத்துவ மனையில் திருவுருவப்படம், பெயர்ப்பலகை திரைநீக்கம்

முள்ளியவளையில் கடற்கரும்புலி மேஜர் சிறி ஞாபகார்த்த மருத்துவமனையில் கடற்கரும்புலி மேஜர் சிறி அவர்களின் திருவுருவப்படமும், பெயர்ப்பலகையும் நேற்று முன்தினம் மாலை திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது.




இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மருந்து களஞ்சியப் பொறுப்பாளர் மனோஜ் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை தளபதி ரஞ்சித் ஏற்றிவைத்தார். பெயர்ப்பலகையினை நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் திரை நீக்கம் செய்துவைத்தார். திருவுருவப்பட சுடரினை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றி வைத்தார்.

படமலர்மாலையினை முல்லை அரச அதிபர் அணிவித்தார். பின் திருவுருவப் படங்களுக்கு போராளிகளாலும், பொதுமக்களாலும் சுடரேற்றி மலர் மாலைஅணிவிக் கப்பட்டது.

நிகழ்வு வரவேற்புரையினை சிறிமுகாம் போராளி புலிக்குட்டி அவர்களும்,சிறப்புரைகளை முல்லை அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தனும், கடற்புலி அரசியல் துறையைச் சேர்ந்த விநாயகமும் ஆற்றினர். அரசாங்க நிகழ்வுகளும் நடைபெற்றன.

## நாய்களுக்கு தடுப்பூசி

(மன்னார்)

மன்னாரில் வீடுகளில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணி மாவட்ட சுகாதார அதிகாரியினால் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வளர்க்கும் நாய்களுக்கு பிரதேச சபையினர் அனுமதி வழங்கி வளையம் போடப்பட்டுள்ளது. கழுத்தில்வளையம போடப்படாத நாய்களினை வீதிகளில் கண்டால் பிடித்து அழிக்கப்படுமென்றும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (மி)

# வீதிஒழுங்கு நடவடிக்கை முள்ளியவளையில் தீவிரம்

-விபத்துக்களைத் தடுக்க காவல்துறை நடவடிக்கை

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேச தமிழீழ காவல் துறையினர் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு நடவடிக்கையினை தீவிரப்படுத்தியுள்ளனர்.

மேற்படி பிரதேச வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளிலும், உந்துருளிகளிலும் சமாந்திரமாக இருவர், மூவர் செல்வதால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றது.

இந் நிலையை தடுக்கும் முகமாக மேற்படி நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் தடுக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு, வருவதுடன் ,சந்திகளில் கடைகளுக்கு முன்பாக தேவையற்ற நிலையில் கூட்டமாக நின்று வீதியால் செல்வோர்களுக்கு இடையூறுகளையும், தேவையற்ற வார்த்தை பிரயோகிப்போர்களும் காவல் துறையினரினால் பணிமனைக்கு அழைத்து செல்லப்பட்டு விழிப்புணர்வு விளக்கக் கருத்துக்கள் போதிக்கப்பட்டு வருகின்றன.

வீதிகளில் கூட்டமாக செல்வதையும், தேவையற்று கூட்டமாக நிற்பதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் வீதி ஒழுங்கினை கடைப்பிடித்து செல்லுமாறும் காவல் துறையினரால் கேட்கப்பட்டுள்ளது.

# போசாக்குணவு பதனிடல் நிலையத் திறப்பு விழா

(முள்ளியவளை)

முள்ளியவளை லவன் பப்பட தொழிலகத்தின் அனுசரணையில் போசாக்கு உணவு பதனிடல் நிலையத்திறப்பு விழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்கு நா.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கினை மாவீரர் பரணியின் தந்தையார் க.நாகரத்தினம் ஏற்றிவைக்க. போசாக்கு பதனிடல் நிலைய கட்டடத்தொகுதியினை முள்ளியவளைப்பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் இ.நாகமைந்தன் நாடாவினை வெட்டித்திறந்துவைக்க முள்ளியவளை கிழக்கு கிராம அலுவலர் கு.தெய்வேந்திரம் போசாக்கு உணவு பதனிடல் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து முள்ளியவளைப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர், முள்ளியவளை கிழக்கு கிராமஅலுவலர், லவன்பப்படத் தொழிற்சாலை உரிமையாளர் இ.தருமராசா ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கியதையடுத்து திருமதி. ந.சரஸ்வதியின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது.

மேற்படி போசாக்கு உணவு பதனிடல் நிலையத்தின் பணியாளர்களாக பெண்கள் நியமிக்கப்பட்டு நிகழ்வு நிறைவானது. (ஆ)

# மாவீரர் நாள் நிகழ்வு குறித்து முன்னோடிக் கலந்துரையாடல்

(முள்ளியவளை)

எதிர்வரும் மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பான முன்னோடி கலந்துரையாடல் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஞானப் பிரகாசர் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் p.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

முள்ளியவளைப் பிரதேசத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளின் அதிபர்கள், ஆசியர்கள் கலந்து கொண்டமேற்படிகலந்துரையாடலில் சமகால அரசியல் நிலைதொடர்பாகவும், மாவீரர்களின் அர்பணிப்பு மற்றும் மாவீரர் நாளின் முக்கியத்துவம் தொடர்பாகவும் சிறப்புக்கருத்துரையினை முல்லைத் தீவு மாவட்ட தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் நிகழ்த்தினார். தொடர்ந்து முள்ளியவளை மாவீரர் துயிலும்இல்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வு எவ்வாறு அனுஷ்டிக்கப்படுவது தொடர்பாகவும் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் எனவும் முள்ளியவளைப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் கருத்துரை வழங்கியதையடுத்துஅனைவரும் கலந்துரையாடி நீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறைவானது. (ஆ)

## நிர்வாகம் தெரிவு

(அக்கராயன்)

அக்கராயன் பிரதேசத்தில் வர்த்தகசங்கத் தெரிவு கடந்த சனிக்கிழமை பி.பகல் 3.00 மணிக்கு அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைவராக. ஜெயபாலன் செயலாளராக. பாஸ்கரன். பொருளாளராக. சிவநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து வர்த்தக சங்க நடைமுறைகள் பற்றியும், மாவீரர் நாள் நிகழ்வு சம்பந்தமாகவும் அப்பகுதி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்களால் விளக்கமளிக்கப்பட்டது. (15)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சி இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறிக்கு தெரிவானோர்களுக்கான பயிற்சிநெறி ஆரம்ப விழாவானது அரச அதிபர் தலைமையில் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று மு.ப.930 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு தெரிவானோர்களுக்கான கடிதங்கள் ஏற்கனவே உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதில் கரைதுறைப்பற்றில் 47 பேரும், புதுக்குடியிருப்பில் 44 பேரும், மாந்தைகிழக்கில் 11 பேரும், துணுக்காயில் 05 பேரும், ஒட்டுசுட்டானில் 10 பேருமாக மொத்தம் 117 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (20)

# கால்வாய்நோய் பரவுவதை கட்டுப்படுத்த ஒத்துழைக்குக

-தமிழீழ பொ.மே.நிறுவனம் கோரிக்கை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்வாய் நோய் பரவுவதைத் தடைசெய்வதற்குத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கால்நடைகளுக்குத் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே கால்நடையை இடத்திற்கிடம் மாற்றுபவர்கள், இறைச்சிக்காக நுகர்வோர்கள் அனைவரும் இதனைக்கருத்திற்கொண்டு இவற்றை மேற்கொள்பவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தி நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், நோய்க்கட்டுப்பாட்டிற்குள் வரும்வரை இந்த நடவடிக்கையினைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லைமாவட்டச் செயலகத்தின் செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

## மாதாந்த சங்கம நிகழ்வு

(உடையார்கட்டு)

முல்லை. மாவட்டம் மாங்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினதும் முல்லை. மாவட்ட தே.எ பேரவைப் பொறுப்பாளரினதும் ஒழுங்குபடுத்தலில் இன்று 10.00 மணிக்குமாதாந்த சங்கம நிகழ்வு நடைபெறவுள்ளது.

எனவே இதில் அனைத்து தே.எ. பேரவை உறுப்பினர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு தே.எ பேரவை முல்லை. மாவட்ட பொறுப்பாளர் மயூரன் கேட்டுள்ளார்.

இதேவேளை உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் எட்டு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுடன் மாவீரர் தின முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கோட்டக் கல்வி அதிகாரி பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வள்ளிபுனம், சுதந்திரபுரம், உடையார்கட்டு, இருட்டுமடு, குரவில், தோராவில், றெட்பானா, விசுவமடு பகுதிகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் முல். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், முல்லை. மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர்,ஆகியோர் மாவீரரின் தியாக அர்ப்பணிப்புகள் சமகால அரசியல் விடயமாகக் கருத்துரை வழங்கினர். (19)

# அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பெ.அபி.பு.நிறுவனத்தால் முன்னெடுப்பு

(முள்ளியவளை)

"எக்கோ","கெயார்" நிறுவன நிதியுதவியுடன் முள்ளியவளை பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் முள்ளியவளை கிழக்கு கிராமத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் அப்பகுதியில் 3 பொதுக்கிணறும், 25 பயனாளிகளுக்கு மலசலகூடமும் அமைக்கப்பட்டு வருகின்றது. அப்பகுதியில் உள்ள 22 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடாக நெல், உரம், விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் சிறுதானிய செய்கையாளர்கள் 20 பேருக்கு சிறுதானிய செய்கைக்காக பயறு, உழுந்து, கௌப்பி, விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது. வீட்டுத்தோட்டம் செய்யும் 15 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட உள்ளீடுகள், உபகரணங்கள் வழங்கப்பட்டு மேற்படி அனைவருக்கும் விவசாய செய்கை தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட்டது.

பயிற்சியினை முள்ளியவளை பகுதி விவசாய போதனாசிரியர் வழங்கினார். (ஆ)

# வவு.செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர் திரு. பொ.வீரசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு.க.கணேஸ் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் விநோகராதலிங்கம் அவர்களும் பிரதித்திட்டப்பணிப்பாளர் திரு.ச.பரமகுலசிங்கம் அவர்க ளும் கலந்துகொண்டனர்.

இறுதியாக வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய மாவட்டங்களின் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அணிகளுக்கிடையே நடாத்தப்பட்ட உதைபந்தாட்டம், கிரிக்கெட், மரதன் ஓட்டப்போட்டி, கயிறு இழுத்தல் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த செவிப்புலன் வலுவற்றோர் கலந்துகொண்டனர். (10)

# சமுதாய முன்னேற்ற நிலையத்தின் நலிவுற்றோர் நலவாழ்வுத்திட்டம்

எமது மண்ணில் நடைபெற்ற போர் அனர்த்தங்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின்- வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் சமுதாயமுன்னேற்ற நிலையம் " நலிவுற்றோர் நலவாழ்வுத்திட்டம்" ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட முதியோர்கள், ஊனமுற்றோர்கள், குழந்தைகள், உழைப்போரை இழந்த குடும்பங்கள், கணவரை இழந்த பெண்கள், தபுதாரர்கள் போன்றோரை கவனத்தில் கொண்டு தொழில்சார் பயிற்சிகள் வழங்குதல், வேலை வாய்ப்பினை வழங்குதல், கல்வி அறிவூட்டல், அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வேலைத்திட்டங்களைச் செய்துவருகின்றது.

இதற்கான கொடிவாரமாக இன்று ஆரம்பித்து செயற்படவுள்ளது. சமுதாய முன்னேற்ற நிலையம் மக்களிடம் இதற்கான ஆதரவை நாடிநிற்கிறது.

# இடைக்கால நிர்வாகம் குறித்து அரசு-புலிகள் பேச்சு நடத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்

லங்காதீப சிங்கள நாளிதழில் ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க

மொழியாக்கம். அ.சக்திவேல்

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்பது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தற்பொழுது உள்ள முக்கிய பிரச்சினையாகும். விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகவே பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பா



டாகும். ஆனால் அரசு இன்னும் இதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சில விடயங்களை அரசு நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது. இடைக்கால நிர்வாக சபையில் அங்கம் வகிப்பவர்கள் புலிகளினால் நியமனம் பெற்றவர்கள் ஐந்து வருடங்களுக்கு இடைக்கால நிர்வாகசபை ஆட்சியைக் கேட்டுள்ளார்கள்.

இங்குள்ள முக்கிய பிரச்சினை இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகச் சமர்ப்பித்துள்ள சில யோசனைகளில் ஏற்பட்டுள்ள சில சிக்கல்கள் சம்பந்தப்பட்டவையாகும். ஆனால் இவைகளைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் அரசுக்கு எந்தச் சிக்கலும் ஏற்படாது. ஆகவே விடுதலைப் புலிகளும், அரசும் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டு முடிவு காண்பதே சிறந்ததாகும். இந்த நேரடிப்பேச்சுவார்த்தைகளில் அரசுக்கு ஏற்பட்டுள்ள சிக்கலான விடயங்களைப் பரிசீலனை செய்யமுடியும். இதை விடுதலைப்புலிகளுக்கு எடுத்துக் காட்ட முடியும். ஆகவே இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்த முடியாது என்று நினைத்தால் அதில் அரசு தோல்வியை தழுவிக் கொள்ள நேரிடும். இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசிடம் பல தரப்பட்ட மாறுபட்ட யோசனைகள் இருக்கலாம். இதைப் பேச்சுவார்த்தை மேசையில் சந்தித்து இரு தரப்பினர்களும் தமது யோசனைகளுக்கு முடிவு காணமுடியும். மேற்கூறிய அடிப்படையில் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வார்கள். இதில் கலந்துகொண்டால் தான் சர்வதேச சமூகம் இவர்களுக்கு மேலும் உதவிகளைச் செய்வதற்கு முன்வருவார்கள். இதனால் அரசும் நன்மை பெறும். மேலும் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக சிக்கல் ஏற்பட்டுப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து மறுமுறை ஒருயுத்தம் ஏற்படுமோ என்று அரசு தற்பொழுது பயந்த நிலையில் உள்ளது. அப்படி ஏற்பட்டால் சர்வதேச நாடுகளில் இருந்து அரசுக்கு எந்த உதவிகளும் கிடைக்காது. ஆகவே மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கு இந்த நாட்டில் இடம் கிடையாது. வடக்கு-கிழக்கு இணைப்புத் தற்காலிகமானதாகும். சர்வசன வாக்கெடுப்பு நடத்திய பின்பே வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படும் என்று அரசு அடிக்கடி கூறுகின்றது. அதை நடைமுறைப் படுத்துவதில் பெரும் சிக்கல்களை அரசு எதிர்நோக்க வேண்டி வரும்.

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கடும் எதிர்ப்பைத் தெரிவித்த வண்ணமுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் கடைசி அரசியல் தீர்வுக்கு



வரவேண்டும் என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும். ஆகவே அந்தத் தீர்மானம் என்ன என்று இதுவரை ஜே.வி.பி. அரசாங்கத்திற்குக் கூறவில்லை. அப்படிக் காரணங்களை வெளியிடாமல் இடைக்கால நிர்வாகத்தை எதிர்ப்பது தவறு. இதையேற்றுக்கொள்ள முடியாது. சனாதிபதியின் இடைக்கால நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினையை ஜே.வி.பி.வன்மையாக எதிர்க்கிறது. இந்த எதிர்ப்பை சனாதிபதி சமாளித்து அவர்களையும் இடைக்கால நிர்வாகம் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வைப்பது. சனாதிபதியின் கடமையாகும். ஐக்கிய சுதந்திர முன்னணியின் சகாக்களான ஜே.வி.பி.யினர் கட்டாயமாக இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டு இனப்பிரச்சினைக்கு முடிவுகட்ட வேண்டும். ஆகவே பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொள்ளாமல் தமது திட்டத்தையும் முன்வைக்காமல் பேச்சுவார்த்தைகளை ஜே.வி.பி. இழுத்தடித்தால் இந்த நாட்டிற்குச் செய்யும் பெரும் துரோகமாகும். பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து விடுதலைப்புலிகளுடன் கலந்துகொள்ளுங்கள் அப்பொழுதுதான் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள முடியும். அதைத் தவிர்த்து உடனடியாகப் பேச்சுவார்த்தைகளுக்கு முடிவு காணுங்கள் என்று ஜே.வி.பி. கூறினால் அது அரசியல் கேலிக் கூத்தாகும். அரசியல் நாகரீகம் தெரிந்தவர்கள் இவைகளைச் செய்ய மாட்டார்கள்.

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகப் புலிகளும் அரசும் கொண்டுவரும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதன் பின் இலகுவாக நிரந்தர அரசியல் தீர்வைக்காணமுடியும். விசேடமாக பொலிஸ் நிர்வாகம் சம்பந்தமாக அதிகாரப்பகிர்வுகள் ஏற்பட்டால் சர்வதேச நாடுகளில் இருக்கும் சட்டங்களின்படி அதை அமுல்படுத்த முடியும். இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் மாகாணங்களில் இயங்கும் பொலிஸ் நிர்வாகம் எப்படி நடக்கின்றதென்பதை உதாரணமாக எடுத்துக்கொண்டு அதன்படி செயற்படுவதில் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படாது என நம்புகிறேன். இந்தியா, இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக மிக நிதானமாக அவதானித்து வருகின்றது.


இடைக்கால நிர்வாகத்தில் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக விடுதலைப்புலிகளுக்கு வழங்கும் அதிகாரங்களை இந்தியாவை ஏற்றுக்கொள்ள வைக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு மாகாண அரசைக் கலைப்பதற்கு இந்திய அரசியல் யாப்பின்படி சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்களை வழங்கும் பொழுது இந்திய சனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களை இலங்கை சனாதிபதி நிறைவேற்றுவாரானால் விடுதலைப்புலிகள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகவே ஒரு மாகாண அரசைக் கலைக்க வேண்டுமானால் பாராளுமன்றத்தில் விவாதித்து வாக்கெடுப்புக்கு விட்ட பிறகு மாகாண அரசைக் கலைக்க முடியும் என அரசியல் யாப்பில் உட்படுத்த வேண்டும். இந்திய அரசியல் யாப்பின்படி மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் சனாதிபதி அவர்கள் எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது சமாதான சபையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால் கடந்த காலங்களில் சனாதிபதி அவர்கள் ரணில் விக்கிரமசிங்காவின் சமாதான நடவடிக்கைகளை விமர்சனம் செய்த படியால் அவர் சமாதான சபையின் தலைவர் பதவியை நிராகரித்துள்ளார். சில வேளைகளில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்தால் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதி ஒருவரை இந்த சமாதான சபைக்கு சனாதிபதியால் நியமித்துக் கொள்ள முடியும். இது சமாதான பேச்சுக்களுக்கு மேலும் வலுவூட்டும். சமாதான சபையின் தலைவர் பதவியை ஏற்று அதை அமுல்படுத்துவது மிக கடினமான விடயமாகும்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் பொழுது அவர்களின் கேள்விகளுக்கு சமாதான சபை பதில் கூற வேண்டும்.

கடந்த நாட்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என விடுதலைப்புலிகள் அடிக்கடி கூறி வந்துள்ளனர். தற்பொழுது சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்முடன் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடியப்போகிறதென்று விடுதலைப்புலிகள் அவரிடம் கூறி உள்ளனர். ஆகவே அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இணைந்து நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க முடியாத நிலையில் உள்ளனர். நோர்வே நாடு இந்த பேச்சுவார்த்தைகளுக்கு அதிக நிதியை செலவிட்டு பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடித்தால் நோர்வே நாட்டுக்கு பெரும்



புகழைத் தேடித்தரும். சர்வதேச அரங்கில் நோர்வேயின் புகழ் உயரும்.

மேலும் எமது நாட்டுக்கு வழங்கப்படும் நிதிகள் சமாதான பேச்சுவார்த்தைகள் வெற்றி கண்டால் கூடுதலாகக் கிடைக்கும். இல்லையேல் டோக்கியோ நிதி 45,000 கோடிரூபாய் எமது நாட்டுக்கு கிடைக்காது. இலங்கை சமாதானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஈராக் அல்லது ஆப்கானிஸ்தானுக்கு வழங்கப்படும். இது ஏற்கனவே சர்வதேச நாடுகள் கூறியுள்ளன.

சில வேளைகளில் இப் பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டு மீண்டும் யுத்தம் ஏற்படுமோ என்ற பீதியில் பொது மக்கள் வாழ்கின்றனர். ஆனால் தற்போது விடுதலைப்புலிகள் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இல்லை. அவர்களும் சமாதானத்தை விரும்புகிறார்கள். சமாதானமாகவே வாழ்வதற்கு தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

அது வெகு விரைவில் நிறைவேறும்.

---

# மக்களுக்கான அரச சேவைகள் முழுமையாக முடங்கிவிட்டதென்கிறார் அமைச்சர் அநுரகுமார

(கொழும்பு)

"இன்று மக்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்காகப் பெரும் போராட்டத்தையே நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். நாட்டின் அரசு இயந்திரம் முற்றாகச் செயலிழந்து மக்களுக்கான அரசாங்கச் சேவைகள் அனைத்துமே முடங்கிப்போயுள்ளன. அரசாங்கத் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் அறவே போதாத நிலையில் அவர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை, விற்பனை செய்ய முடியாத நிலை இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் இல்லை. இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளின் மத்தியில் மக்கள் வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருகின்றனர்."

இவ்வாறு ஜே.வி.பி அமைச்சரும் கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சருமான அநுரகுமார திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தெஹிவளையில் பால்பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் தேசியத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும தெரிவிக்கையில்;

"அரசாங்கம் மக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளான சுகாதாரத்துறை, கல்வித்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்தி என்பன அனைத்துமே சீர்குலைந்துள்ளன. அனைத்தும் இன்று இயங்காமல் உள்ளன. அரச வருமானமான 300 பில்லியன் ரூபா அரச ஊழியர்களுக்கு சம்பளம், ஓய்வூதியம் வழங்கவும், கடனுக்கான வட்டியைச் செலுத்தவும், பாதுகாப்புச் செலவுக்குமே போதுமானதாக உள்ளது. ஆனால் அரசாங்கச் செலவீனம் 600 பில்லியன் ரூபா இதற்கெங்கே போவது? அரச சேவைகளை இயங்கச் செய்யப பணம் இல்லை.

நாளுக்கு நாள் அமெரிக்க டொலரின் விலை அதிகரித்துச் செல்ல, ரூபாவின் விலை வீழ்ச்சி கண்டு வருகின்றது. 9 வாரங்களுக்குத் தான் வெளிநாட்டுப் பணம் கைவசம் உள்ளது. இந்நிலையில் சர்வதேச நாணயச் சபை தன்னிச்சையாகத் தலையிட்டு நிபந்தனைகளை விதிக்கும். அதற்கேற்பத் தான் கடன்களை வழங்கும்.

எமது நாட்டின் ஏற்றுமதி 11 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஆனால் இறக்குமதி 2004 ஆம் ஆண்டில் 1729 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இது மட்டுமா? அதிகரித்துள்ளது கொலைகளும் கொள்ளைகளும அதிகரித்துள்ளது. வாகனவரி அதிகரிப்பைப் போன்று அனைத்து ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதி வரிகளையும் அதிகரிக்க வேண்டும்". என்றும் அமைச்சர் அநுரகுமார திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

# பொலிசாருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

சிறிலங்கா பொலிசில் உள்ள 130 தலைமைப் பரிசோதகர்கள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாகப் பதவி உயர்த்தப்படுவதற்கான அனுமதியை தேசிய பொலிஸ் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

பதவி உயர்வு பெறும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோவிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.



# 'யாருமற்றவர்கள் என எவருமில்லை'

# அரவணைக்கும் செஞ்சோலை!

எமது மண்ணில் யாருமற்றவர்கள் என எவரும் இருக்கக் கூடாது. இவர்களை மண்பற்றும், மக்கள் பற்றும் கொண்ட தமிழீழத்தின் எதிர்காலச் சிற்பிகளாக உருவாக்க வேண்டும் என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் உன்னத நோக்கின் அடிப்படையில் 1991 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே செஞ்சோலை சிறுவர் இல்லம். இந்தச் செஞ்சோலை இல்லம் ஒரு புதிய புரட்சிகர கல்வியின் பரிசோதனைக்களமாக அமைய வேண்டும். ஒரு புதிய அறிவுசார் பரம்பரையை உருவாக்க வேண்டும் என்னும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. இதற்கமைய இச்செஞ்சோலை மகளிர் இல்லமானது யாழ். சண்டிலிப்பாயில் 1991 ஆம் ஆண்டு 23 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது 239 பிள்ளைகளுடன் செயற்பட்டு வருகிறது. கடந்த 13 ஆண்டுகளில் தமிழ் மக்கள் சந்தித்தது போன்றே 8 இற்கு மேற்பட்ட இடப்பெயர்வுகளைச் சந்தித்தபோதும் தனது குறிக்கோளை நோக்கி அது சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது.

இன்று கிளிநொச்சிப் பகுதியிலும் வள்ளிபுனப் பகுதியிலும் இயங்கி வருகின்ற செஞ்சோலை கடந்து வந்த பாதை மிகவும் கடினமானது.

இத்தனைக்கும் மத்தியில் செஞ்சோலை சிறப்பான ஒரு அமைப்பாக உருவெடுத்து வருகிறது. பெற்றோர், உறவினர்களை இழந்து ஆதரவுக்கரம் பற்ற யாரும் இல்லாத நிலையில் தவித்துக்கொண்டிருந்த சிறுமிகளுக்கு ஆதரவுக்கரம் கொடுத்து அவர்களை வளர்த்தெடுத்து சமூகத்தில் ஆளுமை மிக்கவர்களாகவும், தன்னம்பிக்கை, துணிவு, உயர்ந்த மனப்பக்குவம், உடையவர்களாக உருவாக்குகின்ற உயரிய சமூகப்பணியை ஆற்றிவருகிறது. உண்மையில் செஞ்சோலையின் செயல் எமது சமூகத்திற்கு நிச்சயம் அவசியமானதொன்றாகவே உள்ளது. இது கடந்து வந்த துன்பங்கள், துயரங்கள், சுமைகள் அத்தனையும், தாங்கி செஞ்சோலையால் தொடர்ந்தும் நிமிர்ந்து நிற்க முடிந்தது என்றால் அதற்குத் தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடி மேற்பார்வையும் வழிகாட்டலும்தான் காரணம். இந்தவகையில் செஞ்சோலை பற்றியும், அதன்செயற்பாடுகள் பற்றியும் அது சந்தித்த நெருக்கடிகள், துயரங்கள் பற்றியுமான பல்வேறு விடயங்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக செஞ்சோலை உருவாக்கப்பட்டது முதல் இன்று வரையான காலம்வரை அந்தச் சிறுமிகளுடன் இணைந்து அவர்களின் எதிர்கால உயரிய வாழ்வுக்காக சலிப்பின்றி கடமை புரிந்துவரும் ஆசிரியரான திருமதி இராஜகுமார்- மனோரஞ்சிதமலர் அவர்களிடம் நேர் காணலை நடத்தினோம். அந்த நேர்காணலை இங்கு தருகிறோம்.

* * * * *

**★செஞ்சோலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன?**

தமிழீழத்தில் உறவுகளை இழந்து யாருமற்றவர்கள் எவருமே இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி உருவாக்கப்பட்டதுதான் செஞ்சோலை சிறுவர் இல்லம். இந்த இல்லத்தில் வளர்கின்ற குழந்தைகள் தமிழ்ப்பற்று மிக்கவர்களாகவும், தமிழீழ மண்ணின் மீது பற்றுள்ளவர்களாகவும் வளர்க்கப்பட்டு எதிர்காலத்தில் எங்கள் தமிழீழத் தேசத்தைக்கட்டியெழுப்பக் கூடியவர்களாக வளர வேண்டும் என்பதுதான் இதன் அடிப்படை நோக்கமாக இருக்கிறது.

செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் பிறந்து நான்கு நாள் மாத்திரமே உடைய குழந்தை முதல் 27 வயது வரையானவர்கள் மட்டும் இருக்கிறார்கள்.

**★இவர்களின் எதிர்கால வாழ்விற்குப் பயன்தரக்கூடியவகையில் எத்தகைய கல்விமுறையை இங்கு வழங்கி வருகிறீர்கள். ?**

செஞ்சோலையில் பல்வேறுபட்ட வயது அடிப்படையில் உள்ளவர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரின் கல்விமட்டம், ஒவ்வொரு நிலையில் இருக்கிறது. சிலர் வயதில் அதிகமான நிலையில் அதாவது 14-15 வயது நிரம்பிய நிலையில் செஞ்சோலையில் இணைந்திருக்கிறார்கள். இந்த வயதுகளில் இணைபவர்களின் கல்விமட்டம் வீழ்ச்சி நிலையிலேதான் இருக்கும். இவர்களை நாங்கள் அடிப்படையில் இருந்துதான் கொண்டுசெல்ல வேண்டும். இதனால் வெளிப்பாடசாலைகளில் இவர்களை இணைக்க முடியாது. இதனால் இவர்களைக் கல்வி ரீதியாக உயர்த்துவதற்கு 1991ஆம் ஆண்டு 7ஆம் மாதம், 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலேயே செஞ்சோலை மகளிர் வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தோம். கல்வி நிலையில் பின்தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வியை இந்தப் பாடசாலையில்தான் கற்பித்துப் பின்னர் அவர்களது கல்வி ரீதியான முன்னேற்றத்தை அவதானித்து மேலதிக கல்விக்காக அந்தப்பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு அனுப்புகிறோம். அதேவேளை இந்தப் பிள்ளைகளுக்கு மாலை நேரத்தில் துறைசார்ந்த கல்வியை வழங்குகின்றோம். இந்தக் கல்வி மூலம் எந்தத்துறையில் பிள்ளைகள் அதிகம் ஈடுபடுகிறார்களோ- பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு அந்தத்துறை பற்றிய புலமையை வளர்க்கும் செயற்பாட்டில் நாம் ஈடுபடுகிறோம். எம்மால் வழங்கப்படுகின்ற துறைசார்ந்த கல்வி பலருக்குப் பெரிதும் உதவியாக அமைந்திருக்கிறது. செஞ்சோலையிலிருந்து திருமணமாகிச் சென்றிருக்கின்ற பலர் இன்றும் எம்மால் வழங்கப்பட்ட தொழிற் பயிற்சிகளைப் பயன்படுத்தி வருவாயைப் பெற்றுவருகின்றனர்.

செஞ்சோலை மகளிர் வித்தியாலயத்தில் துறைசார்ந்த தொழில்சார் பயிற்சிகளாகத் தையல், மரவேலை, விவசாயம், மனையியல், உடற்கல்வி புகைப்படக் கலை, வீடியோ, கைவேலை இலத்திரனியல் ஒலிப்பதிவு, புத்தகம் கட்டுதல், தட்டச்சு போன்ற பயிற்சிகளை வழங்கி வந்தோம். இவற்றில் பயிற்சி பெற்ற பிள்ளைகள் எமது அனுமதியுடன் மீண்டும் உறவினர்களிடம் சென்றவர்கள், அல்லது நாங்கள் திருமணம் செய்து வைத்தவர்கள். இங்கு தொழிற்பயிற்சி பெற்ற காரணத்தால் இப்போது அதனைப் பயன்படுத்தி சுயமாக வருவாயைப் பெருக்கி வருகின்றனர். இதேவேளை இவர்களுக்குக் கலைத் துறையிலும், நடனம்,சங்கீதம், சித்திரம், கராட்டி,சாரணியம், வாத்தியங்கள் இசைத்தல் போன்ற துறையிலும் பயிற்சியளித்து வந்திருக்கின்றோம். இந்தவகையில் இவர்களுக்குப் பயிற்சியளித்த ஆசிரியர்களான முரளி, கண்ணன் மாஸ்ரர், சோதி மாஸ்ரர், கோபி, சச்சி மாஸ்ரர், ஆகியோரும் மற்றும் கண்ணன், ஓவியநாதன், இளங்கோ, டொமினிக் ஜீவா, ஆகியோருக்கு எமது பாராட்டையும் தெரிவிக்கின்றோம்.

**★செஞ்சோலையின் செயற்பாடுகளுக்கான உதவிகள் எவ்வாறு கிடைக்கின்றன?**

செஞ்சோலையின் செயற்பாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. அவர்கள்தான் எமது செயற்பாடுகளுக்கான உதவிகளை வழங்கி வருகின்றனர். அதேவேள்ளை இவர்களுடன் தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் வசித்துவரும் தேசத்தின்



திருமதி.இ.மனோரஞ்சிதமலர்

உறவுகளும் இதற்கான ஒத்தாசைகளை வழங்கி வருகின்றனர். அத்துடன் தாயகத்தில் வாழ்ந்துவரும் நல்ல உள்ளம் படைத்தவர்களும் கல்வித்துறைசார்ந்த பெரியார்களும், அறிஞர்களும் காலத்தில் தொடர்ந்து பங்களித்து வருகின்றனர். இந்த இடத்தில் இன்னும் ஒன்றை குறிப்பிட வேண்டும். இங்கே கடமைபுரிகின்றவர்கள் ஊதியத்திற்கு அப்பாற் சேவை உணர்வில் பணிபுரிகின்றனர். இவர்களது சேவையும் எமக்கு முக்கியமானது. இந்த வகையில் எமக்கு உதவிகளை வழங்கி வருகின்ற அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றி களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



ஆரம்பிக்கப்பட்டபோது இணைக்கப்பட்ட சிறார்கள்

**★செஞ்சேலையில் இருந்து சமூகத்துடன் இணைகின்றவர்கள் சமூகத்தின் செயற்பாடுகளுடன் எவ்வாறு இணைந்து செல்கிறார்கள்?**

பெரும்பாலும் சமூக ஓட்டத்துடன் இணைந்து கொள்கின்றனர். நாங்கள் எமது பிள்ளைகளை எங்கள் பாடசாலையில இருந்து உரிய வயதில் வெளிப்பாடசாலைகளுடன் இணைத்து வருகிறோம். இவ்வாறு வேறுபாட சாலைகளுக்கு செல்கின்ற பிள்ளை சமூகமட்டத்தில் இருக்கின்ற துன்பங்கள், துயரங்கள், கஷ்ரங்கள் என்பவற்றுடன் அவர்களின் பழக்கவழக்கங்கள் என்பவற்றை உணரக் கூடிய இந்த செயற்பாடு எமக்கு நன்மையைத்தந்தது. இதன் மூலம் நல்ல விடயங்களையும், தீய விடயங்களையும் பிரித்துப் பார்க்கின்ற ஒரு வரவேற்கத்தக்க பண்பு பிள்ளைகளிடம் உருவானது. அதேவேளை இவர்கள் தமது கல்வி, விளையாட்டு என்பவற்றிலுள்ள திறமைகளை தேசியமட்டம் வரை கொண்டு செல்வதற்கான வாய்ப்பாகவும் அமைந்திருந்தது.

**★யுத்தகால நெருக்கடிகள் செஞ்சோலையின் செயற்பாட்டில் எத்தகைய நெருக்கடிகளை ஏற்படுத்தியது. ?**

செஞ்சோலையின் செயற்பாட்டில் யுத்தம் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. 1991ஆம் ஆண்டு சண்டிலிப்பாயில் செஞ்சோலை முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடகாலத்துக்குள் இராணுவ நடவடிக்கை காரணமாக சண்டிலிப்பாயிலிருந்து செஞ்சோலை மானிப்பாயிற்கு இடம் பெயர்ந்தது. பின்னர். மானிப்பாயிலிருந்து கோப்பாய்க்கு இடம் பெயர்ந்தோம். கோப்பாயிலிருந்து அரியாலைக்கு இடம் பெயர்ந்தோம். அரியாலையிலிருந்து மட்டுவிலுக்கு வந்தோம். பின்னர் கிளிநொச்சிக்கு வந்தோம். அங்கிருந்து மல்லாவி வடகாட்டுக்குப்போனோம். வடகாட்டிலிருந்து புதுக்குடியிருப்பு இரணைபாலைக்கும்,

தமிழீழ விடுதலைப் புலிகள்
**Liberation Tigers of Tamil Eelam**

TAMIL EELAM

தலைவரின் வாழ்த்து

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
22.10.1991.

அன்புடையீர்,

தமிழீழத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் உன்னத பணியை இலட்சியமாகக் கொண்ட செஞ்சோலை சிறுவர் இல்லம் இன்று திறக்கப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த செஞ்சோலை இல்லம் ஒரு புதிய, புரட்சிகரக் கல்வியின் பரிசோதனைக்களமாக அமைய வேண்டும். மண் பற்றும், மக்கள் பற்றும் கொண்ட ஒரு புதிய அறிவுசார் பரம்பரையை உருவாக்கித்தர வேண்டும். சுபீட்சகரமான தமிழீழ சமுதாயத்தைப் படைக்கும் தேசநிர்மாணிகளை தோற்றுவிக்க வேண்டும்.

வரலாற்றுப் பெருமைமிகு சுதந்திரப் போராட்ட சூழலில், இந்த செஞ்சோலை வளாகத்தில், நாம் இன்று இந்த இளம் விதைகளைப் பயிரிடுகிறோம். இவை வேர் விட்டு வளர்ந்து, விழுதுகள் பரப்பி, விருட்சங்களாக மாறி, ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாக செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.

இந்தப் புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள்.

" புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம் "

வே.பிரபாகரன்
(வேலுப்பிள்ளை பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

ஆரம்ப தினத்தன்று தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி.

# நாளை செஞ்சோலையின் 13ஆவது நிறைவு நாள்

நேர்காணல்
## அ.லோகீசன்

பின்னர் கைவேலிக்கும், அங்கிருந்து வள்ளிபுனத்திற்கும் சென்றோம் இறுதியாக இப்போது கிளிநொச்சியில் நிற்கிறோம். இது செஞ்சோலையின் இடம் பெயர்வாழ்வு இடம் பெயர்ந்தோம் என்பதற்கு மேலாக கைக் குழந்தைகள் முதல் அனைவரையும் இடம்மாற்றுவது என்பது தான் எமக்குப் பெரும் சிக்கலாக இருந்தது. கைக்குழந்தை களை இடம் மாற்றுவது என்பது பெரும் கஷ்ரமான காரியம். சூழல் மாற்றம், வெப்பம் தண்ணீர் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அடுத்ததாக தொடர் இடப் பெயர்வுகள் பிள்ளைகளின் கல்வியை பெரிதும் பாதித்தது. செஞ்சோலை உருவாக்கப்பட்டபோது பத்துபேர் ஆசிரியர்களாக நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு முழுமையான பயிற்சி வழங்கப்பட்டது. இந்தநிலையில் நாம் இடம் பெயர்ந்து அரியாலைக்கு வந்தபோது பத்து ஆசிரியர்களில் எட்டுப்பேர் போய்விட மீதி இரண்டு ஆசிரியர்கள் தான் இருந்தோம். இந்த நிலையில் பிள்ளைகளை பாரமரிப்பதில் எல்லாம் பெரும் சிக்கல் ஏற்பட்டது. இதனால் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஆசிரியர்களாகிய நாங்களும் சேர்ந்து பிள்ளைகளையும் பராமரித்தோம் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான வேலைகளில் மாலை நேரத்தில் நாங்களும் ஈடுபட்டோம். பின்னர் விலகிய ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மீண்டும் நேர்முகத்தேர்வு வைத்து ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். பின்னர் 1995 ஆம் ஆண்டு கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்த போது ஆசிரியர்கள் எவரும் வரவில்லை இதனால் வன்னியில் ஆசிரியர்கள் புதிதாக உள்வாங்கப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு வள ஆளுனர்கள் இல்லை. இதனால் இந்த ஆசிரியர்கள் பலரால் பிள்ளைகளின் மனநிலையை அறிந்து அவர்களுக்கு ஏற்ற முறையில் கல்வி கற்பிப்பதில் தடைகள் ஏற்பட்டது. இதனால் இவர்களின் கல்வி நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இப்படி


செஞ்சோலைச் சிறார்கள்.

யுத்தம் செஞ்சோலையின் செயற்பாட்டில் பெருந்தடைகளை போட்டது. இந்த இடத்தில் இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும். இடப் பெயர்வால் நாங்கள் 1996ஜூலை 1998 செப்ரெம்பர் வரை மரங்களின் கீழ்த் தான் பாடசாலை நடந்தது. தறப்பாள்களின் கீழ் இருந்தோம். இப்படி பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதும் பாதுகாப்பதும் என பெரும் கஷ்ரங்களை அனுபவித்தோம். இந்த நிலை எமக்குப் பெரும் பின்னடைவைத்தந்தது. வள்ளிபுனத்துக்கு வந்த போது எமது பிள்ளைகளுக்கு கற்பித்துவந்த ஆசிரியர்கள் பலர் அரசாங்க நியமனம் பெற்றுச் சென்று விட்டனர். இதனால் நாம் இன்னும் பல மடங்கு கஷ்ரத்தை சந்தித்தோம். அப்போது அம்பகாமத்தில் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. நாம் இருந்த பகுதிக்கு சிங்களப்படைகள் வந்து விடுவார்களோ.....? என்ற பீதி பிள்ளைகளை சூழ்ந்து கொண்டது. இதனால் பிள்ளைகளின் கவனம் படிப்பில் செல்வதைவிட யுத்தம்பற்றிய பீதியிலேயே இருந்தது. 1993-1994 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் செஞ்சோலைப்பிள்ளைகளின் கல்விவளர்ச்சி வியக்கத்தக்கஅளவில் உயர்ந்து கொண்டிருந்தது. பின்னர் யாழ்ப்பாண இடப்பெயர்வின் காரணமாக கல்வி நிலை வீழ்ச்சி அடைந்து விட்டது. இந்த வீழ்ச்சிக்கு செஞ்சோலை பிள்ளைகளின் மன நிலையை புரிந்து அதற்கமைவாகக் கல்விகற்பதை வழிகாட்டக்கூடிய உளவியலாளர் பற்றாக்குறை, இடம் பெயர்வு, ஒழுங்கன வகுப்பறையின்மை, இடமின்மை யுத்தத்தால் பாதுகாப்புத் தேடித் தனிமைப்படுத்தப்பட்டதான சூழல் என்பவற்றால் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சி அடையவேண்டி ஏற்பட்டது.

***★செஞ்சேலையில் சிறுவர்களை இணைப்பது விடுதலைப்புலிகள் சிறுவர்களை போரில் ஈடுபடுத்துவதற்காக என அரசும் சில சக்திகளும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இது பற்றி உங்களது கருத்து என்ன?***


இன்றைய நிலையில் 04 நாள் குழந்தையும் 02 மாதக் குழந்தையும் எடுத்து அந்தக் குழந்தைக்கு 18 வயது வருவதற் கிடையில் விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்து விடும். அதற்கு ஏற்படப் போகும் செலவீனம் மிகப்பெரியளவு. நாங்கள் இவர்களைப் போராளியாகத்தான் மாற்ற வேண்டும் என்றால் எங்களுக்கு இந்தப பிள்ளைகளைத்தான் வளர்க்க வேண்டும் என்ற தேவை இல்லை. நாங்கள் பெரியவர்களை எடுத்தே செயற்படுத்தலாம்.

இந்த விடயங்களை வெறுமனே பேசுவதில் அர்த்தமில்லை இன்று கண்முன்னாலேயே பிள்ளைகள் படிக்கிறார்கள்.


தேசியத்தலைவர் அவர்களுடன் செஞ்சோலைச் சிறார்கள்

வளர்ந்து குடும்பமாகிப்போகிறார்கள். வேலைகளில் ஈடுபடுகிறார்கள் சமூகத்துடன் பல்வேறு பக்கங்களில் இணைந்து போய்நிற்கிறார்கள் உறவுகள் இல்லாத நிலையில் செஞ்சோலையில் இணைந்திருந்து விட்டு பின்னர் உறவுகளை தேடி கண்டுபிடித்து அவர்களுடன் சென்றவர்கள் 100இற்கும் அதிகமானவர்கள் இருக்கின்றனர். அப்படியானால் இயக்கத்துக்குப் போகின்றவர்கள் என்றால் அவர்களை உறவுகளுடன் செல்ல அனுமதித்திருக்க மாட்டோம் அல்லவா?அப்படியானால் இவர்களால் எப்படிப் போகமுடியும்?

உறவுகளே இல்லை என்றிருந்த பலருக்கு நாங்கள் உறவுகளை தேடிக்கண்டு பிடித்துக் கொடுத்திருக்கிறோம். சரியான ஆதாரங்களுடன் வந்து செஞ்சோலையில் இருக்கும் ஒருவர் தமது உறவு என நிரூபிக்கும் சந்தர்ப்பத்தில் நாம் அதனை ஏற்று உரியவரை கையளித்திருக்கிறோம். எமது செயற்பபாடு அப்படியானது அல்ல


செஞ்சோலைச் சாரணர்களின் கடற் பயிற்சி

என்பதை நாம் பலருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

***★ஏனைய சிறுவர் இல்லங்களுக்கும், செஞ்சோலைக்கும் இடையில் இருக்கின்ற வேறுபாடு என்ன?***

ஏனைய சிறுவர் இல்லங்களுக்கும் செஞ்சோலைக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளது. செஞ்சோலையில் இருக்கின்ற பிள்ளைகள் போரினால் தமது பெற்றோர் உறவுகளை இழந்தவர்கள். ஆதரவுக்கரம் கொடுப்பதற்கு அரவணைப்பதற்கு யாருமற்ற நிலையில் இருந்தவர்கள் தான். இங்கே இருக்கிறார்கள். இவர்கள் கல்விகற்று முடிந்தவுடன் செஞ்சோலையை விட்டு செல்லமாட்டார்கள். ஆனால் ஏனைய சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளைகளுக்கு தாய் தந்தை உறவுகள் இருக்கிறது அவர்களின் பொருளாதார நிலைகாரணமாக சிறுவர் இல்லங்களில் இணைகிறார்கள். குறிப்பிட்ட காலம் நிறைவடைந்ததும் தமது உறவுகளுடன் இணைந்து கொள்கிறார்கள். செஞ்சோலைப் பிள்ளைகளுக்குத் தாய்வீடாக செஞ்சோலையே உள்ளது.


***★இங்கிருக்கின்ற பராமரிப்பாளர்கள் பற்றிக் கூறுங்கள்?***

செஞ்சோலைப் பிள்ளைகளை பராமரித்து வருகின்ற பராமரிப்பாளர்கள் தான் எங்கள் பிள்ளைகளுக்கு அம்மா எனவே பராமரிப்பாளர்கள் என்பதைவிட அம்மா என்று எங்கள் பிள்ளைகளின் மொழியில் சொல்வதுதான் நல்லது. அம்மாமாரின் உணர்வுகள் போற்றப்படக் கூடியது. இவர்கள் உண்மையில் ஒரு குழந்தையின் செயற்பாடுகளில் தாய் எப்படி செயற்படுகிறாரோ அதேபோல இந்தப்பிள்ளைகளின் செயற்பாடுகளில் அதாவது சுகயீனம் என்றாலும் சரி அல்லது அவர்களின் பாடசாலை சார்ந்த விடயங்கள் என்றாலும்சரி அனைத்து அன்றாட செயற்பாடுகளிலும் இவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு செயற்படுகிறார்கள். இந்த நிலையில் பிள்ளைகளும் இவர்கள் மீது அளவற்ற பாசம் வைத்திருக்கிறார்கள். இதற்கு நல்லதொரு உதாரணத்தைக் கூறலாம் என்று நினைக்கின்றேன். நீண்ட காலமாக எமது பிள்ளைகளைப் பராமரித்து வந்த அம்மா ஒருவர் பணியிலிருந்து நீங்கி வீட்டுக்குச் செல்வதற்குத் தயாரானபோது அங்கே பல பிள்ளைகள் மனம் கலங்கி வேதனையடைந்து அழ ஆரம்பித்துவிட்டனர். இதனால் இன்று அந்த அம்மா தொடர்ந்தும் வேலை செய்கிறார். இதை வைத்துக்கொண்டு நீங்கள் இவர்களைப் பற்றி அறியலாம்.

***★இருக்கின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு வயதடிப்படையில் கூறமுடியுமா?***

செஞ்சோலை 23 பிள்ளைகளுடன்


செஞ்சோலைச் சிறுமியின் உடற்பயிற்சிக் கண்காட்சி


செஞ்சோலைப் பிள்ளைகளின் திருமண நிகழ்வில்

ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் தொகை காலப் போக்கில் அதிகரித்தும் குறைவடைந்தும் இன்று 239 பிள்ளைகள் இங்கே இருக்கின்றார்கள். வயதடிப்படையில் ஆறு வயதிற்குட் பட்டவர்கள் ஏழுபேரும், ஏழு வயது தொடக்கம் 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் 62 பேரும், 13 வயது தொடக் கம் 18 வயது வரையானவர்கள் 120 பேரும், 19வயதிற்கு மேற்பட்டவர்கள் 50 பேரும், ஆக மொத்தம் 239 பிள்ளைகள் இருக்கின்றனர். இதேவேளை செஞ்சோலையில் இருந்த பிள்ளைகளில் பதினொரு பிள்ளைகளுக்கு எமது பொறுப்பிலேயே தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பிற் கமைவாக திருமணம் செய்து வைத்திருக் கின்றோம். இதேசமயம் இப்போதும் ஆதரவற்ற பிள்ளைகள் எம்முடன் இணைந்து வருகின்றார்கள்.

***★செஞ்சோலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை எவ்வளவு நிறைவு செய்திருக்கிறது?***

எமது தேசியத் தலைவர் அவர்களின் எதிர்பார்ப்பு என்னவென்றால், அந்நியனின் ஆக்கிரமிப்பால் பெற்றோரை இழந்த குழந்தைகள், இன்னும் சமுதாயத்தில் பாதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளைப் பொறுப்பேற்று இந்தத் தமிழீத்தில் பூரண மனித


உணவு பரிமாறும் செஞ்சோலைப் பொறுப்பாளர்

னாகவும், பல துறைசார்ந்து கல்வி கற்று, எமது நாட்டுப் பற்றுடைய பிரஜையாகவும், இந்நாட்டைக் கட்டி எழுப்பக்கூடியவனாகவும், சமுதாயகத்திற்கு முன்னோடியாகவும் வளரவேண்டும் என்பதே அவரது எதிர் பார்ப்பு. அவ் எதிர்பார்ப்பு எம்மால் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் நிறைவேற்றப்படுகிறது. காலப்போக்கில் எதிர்பார்ப்பை எம்மால் முடிந்தவரை முழுமையாக நிறைவேற்றமுயல்வோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது எனவும் தெரிவித்தார்.

* * * *

இந்நிலையில் பல்வேறுபட்ட நிலையில் இருந்தும் செஞ்சோலையில் இணைந்து கொண்ட பிள்ளைகளைச் சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய அளவிற்கு கல்வி அறிவு ஊட்டியும், சிறந்தபண்புமிக்கவர்களாகவும் கட்டி வளர்ந்திருக்கிறது. ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி இருக்கிறது. இவ்வாறு உருவாக்குவது என்பது வெறும் சாதாரணவிடயம் அல்ல. சிறுவர் முதல் யுவதிகள்வரை எனப் பலதரப்பட்டவர்களையும் ஒரே குடையில் சீரானபாதையில் கட்டியெழுப்பும் பணியை செஞ்சோலை தனது 13வருட காலத்தில் சிறப்பாகச் செய்து வருகிறது. செஞ்சோலைப் பிள்ளைகள் இன்று பல்வேறுதுறைகளிலும் கால் பதித்திருக்கிறார்கள். இத்தனை யுத்த நெருக்கடி களுக்குள்ளும் முகம் கொடுத்து பல பின்னடைவுகளை சந்தித்திருந்த செஞ்சோலைப பிள்ளைகளின் திறமை இப்போது வெளிவர ஆரம்பித்திருக்கிறது. இந்தப் பிள்ளைகள் எதிர்காலத்தில் வியக்கத்தக்க சாதனைகளை நிகழ்த்துவதற்கான முன்னோடி செயற்படாகலாம். இதனைப் பார்க்கமுடியும். செஞ்சோலை பிள்ளைகள் பிரமிக்கவைக்கும் சாதனைகளைச் செய்யும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

# அரசாங்க அறிவித்தல்

## மாகாண சுகாதார சேவைகள்
## பிரதிப்பணிப்பாளர் பணிமனை — கிளிநொச்சி

### அழுக்குத்துணி கழுவுதல் – 2005

2005ஆம் ஆண்டு மா.சு.சே.பி.பணிப்பாளர் கிளிநொச்சி பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத்துணி கழுவுவதற்கான கேள்விகள் 2004.11.10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்புவோர் கேள்விப்பணமாக ரூபா.50/= ஐயும் கேள்விப்பத்திரப் பணமாக ரூ.100/= ஐயும் செலுத்தி 2004.11.10ஆம் திகதி புதன்கிழமை 16.00மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

நிறுவனம்

01. மாவட்ட வைத்தியசாலை
02. சு.கூறு அக்கராயன்
03. சு.கூறு பூநகரி
04. சு.கூறு பளை
05. ம.ம.ம.மனை தர்மபுரம்
06. ம.ம.ம.மனை வட்டக்கச்சி
07. ம.ம.ம.மனை வேரவில்
08. ம.ம.ம.மனை உருத்திரபுரம்

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும் மெழுகுமுத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்விவிபரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்க மாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ள முடியும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,
மாகாண சுகாதார சேவைகள்
பிரதிப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

# அரசாங்க அறிவித்தல்

## மாகாண சுகாதார சேவைகள்
## பிரதிப்பணிப்பாளர் பணிமனை — கிளிநொச்சி

### பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்கல் – 2005

2005ஆம் ஆண்டு மா.சு.சே.பி.பணிப்பாளர் கிளிநொச்சி பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 2004.11.10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் பெறவிரும்புவோர் தமது பெறுமதி சான்றிதழும் (Worth Report) எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாத முறியும், (Bid Bond) சமர்ப்பித்து கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 100/= அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிப்புடனான,கேள்விக் கட்டுப்பணமும் செலுத்தி 2004.11.09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 16.00மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்கள் பின்வருமாறு:-
அ. உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலை

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி | பெறுமதிச்சான்றிதழ் |
|---|---|---|---|
| மா.வை.கிளிநொச்சி | 2000ரூபா | 50,000 ரூபா | 20,000ரூபா |

ஆ. சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச்சான்றிதழ் |
|---|---|---|---|
| 01. சு.கூறு அக்கராயன் | 1500ரூபா | 40,000ரூபா | 15,000 ரூபா |
| 02. சு.கூறு பூநகரி | 1500ரூபா | 40,000ரூபா | 15,000 ரூபா |
| 03. சு.கூறு பளை | 1500ரூபா | 30,000ரூபா | 15,000 ரூபா |
| 04. ம.ம.ம.மனை தர்மபுரம் | 1000ரூபா | 25,000ரூபா | 15,000 ரூபா |
| 05. ம.ம.ம.மனை வட்டக்கச்சி | 1000ரூபா | 20,000ரூபா | 15,000 ரூபா |
| 06. ம.ம.ம.மனை வேரவில் | 1000ரூபா | 20,000ரூபா | 15,000 ரூபா |
| 07. ம.ம.ம.மனை உருத்திரபுரம் | 1000ரூபா | 20,000ரூபா | 15,000 ரூபா |

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும், மெழுகுமுத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு, கேள்விவிபரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்க மாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ள முடியும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி,
மாகாண சுகாதார சேவைகள்
பிரதிப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-10278)

# 3 ஆம் ஆண்டு நினைவு நாள்



## 2ஆம் லெப்ரினன்ட் கலைநிலா/சுபநிலா
### தில்லையம்பலம் றஜனி

புழுமச்சிநாதகுளம், மாங்குளம்.

வீரச்சாவு:-
21-10-2001ஆம் ஆண்டு

சம்பவம்:-
முல்லைக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை யுடனான நேரடி மோதலின் போது.

தகவல்:-
போராளி
இ. இசைக்கீரன்,
லெப்ரினன்ட்கேணல் ராதா
வான்காப்பு படையணி.
தமிழீழம்.

(5204)

# நினைவில் நீங்கா நான்காம் ஆண்டு
# வீரவணக்கம்

ஈன்றவள் மடியில்
25 - 07 - 1975



ஈழத்தாய் மடியில்
21 - 10 - 2000

## கப்டன் மலரவன் /வேலவன் /முத்தையா
### (இரத்தினசிங்கம் நாதரூபன்)

அழியா நினைவில் அடங்கா
விடுதலை உணர்வோடு
ஆயிரம் ஆயிரம் வீரவணக்கங்கள்.

மாவீரர் வேலவனின் நான்காம் ஆண்டு நினைவு வீரவணக்க நிகழ்வு முத்தையன் கட்டுபுனித பூமிசிறுவர் கல்வி நலன் காப்பகத்தில் 21.10.2004 இன்று நிகழும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:-
குடும்பத்தினர்,
புனிதபூமி சிறுவர்கள்,
போராளிகள், ஆசிரியர்கள் நிர்வாகிகள்.

(5197)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
16 - 01 - 1975



தாய்கு மண்ணில்
21 - 10 - 2001

## கடற்புலி
## லெப்.கேணல் கலாத்தன்/செங்கண்ணன்
### சுந்தரலிங்கம் சிறிகரன்

கடலிலே காவியம் படைக்கும்
கடற்புலிகள் அணியில் இணைந்து
கலங்கள் பல அழித்து
காவியமான கலாத்தனே - நீ
எம்மை விட்டுப்பிரிந்து மூன்றாண்டிலே
உன்நினைவை நெஞ்சில்
நிறுத்துகின்றோம்.

மருதங்கேணி, வடக்கு,
வடமராட்சி கிழக்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

(5164)

# காங்கிரஸ் -தேசியவாத காங்கிரஸிற்குள் முரண்பாடு

# மகாராஷ்ராவில் புதிய அரசமைப்பதில் முடிவில்லை!

## - முன்னைய முதல்வரை பதவியிலிருக்க வலியுறுத்து

(புதுடில்லி)

மகாராஷ்ரா மாநிலத்தில் ஆட்சியமைப்பது தொடர்பாக காங்கிரஸ்- தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே முட்டுக் கட்டைகள் ஏற்பட்டுள்ளது.

தாம் மிகவும் களைப்படைந்து இருப்பதால், இந்த பேச்சுவார்த்தைகளை தள்ளி வைத்துள்ளதாக தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் கூறியுள்ளார்.

இதேவேளை, மகாராஷ்டிரா முதலமைச்சர் சுனில் குமார் ஷிண்டே தனது ராஜினாமா கடிதத்தை மாநில ஆளுனரிடம் கையளித்துள்ளார்.

மாற்று ஏற்பாடும் செய்யப் படும்வரை காபந்து முதலமைச்சராக இருக்குமாறு ஆளுனர் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் ஷிண்டே கூறியுள்ளார்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மகாராஷ்ரா ஆளுனர், முகமது ஹசைல் புதிய அரசு இன்னும் ஓரிரு நாட்களில் அமைக்கப்பட்டு விடும் என்று கூறியுள்ளார்.

வேறு எந்த கட்சியும் ஆட்சியமைக்க கோரவில்லை என்பதனால் காங்கிரஸ்- தேசியவாத காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு அளிக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களை கோரப்போவதில்லை என்று கூறியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநில சட்டப் பேரவை தேர்தலில் கூட்டாக போட்டியிட்ட காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸ் என்பன கூடிய இடங்களை தமதாக்கி கொண்டிருப்பினும் ஆட்சியதிகாரத்தை பகிர்ந்துகொள்வதில் உடன்பாடு எட்டமுடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

# ஆசிய நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்ய தேவையான வசதிகளை வழங்கத்தயார்!

## - இந்திய பிரதமர் மன்மோகன்சிங்

(புதுடில்லி)

இந்தியாவில் ரூபா 15 ஆயிரம் கோடிக்கு நேரடி அன்னிய முதலீடு செய்ய ஊக்குவிக்கப் படும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய- ஆசிய நாடுகளுக்கு இடையிலான 3-ஆவது வர்த்தக மாநாட்டைப் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது சர்வதேச சிறந்த பயிற்சியாளர்களை அடிப்படையாகக்கொண்டு தரமான அடிப்படை கட்டமைப்பை உருவாக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் நேரடி அந்நிய முதலீடு 15ஆயிரம் கோடியாக இருக்கும் என்று நாம் நம்புகின்றறோம். அதற்கான ஒரு சூழ்நிலையை பொதுத்துறை மற்றும்தனியார் நிறுவனங்கள் மூலம் உருவாக்கி வெற்றி காணவேண்டும்.அடிப்படைக்கட்டமைப்பு வசதி செய்ய அதிகளவு பணம் தேவை. ரயில்வே மற்றும் விமான நிலையங்களுக்கு மட்டும் வரும் 10ஆண்டுகளில் ரூபா 5,500 கோடி தேவை, மின்சாரத்திற்கு ரூபா 7,500 கோடி யும்,ரெலிக்கொம் துறைக்கு ரூபா 2,500 கோடியும் தேவைப்படுகின் றது. ஆசிய நாடுகள் தங்களது தொழில்களை இந்தியாவில் தொடங்குவதற்கு வசதியாக இந் தியா ஏராளமான வசதி வாய்ப்புக் களை செய்து கொடுக்கும். அதன் மூலம் தேவையான வருவாய் வருவதற்கு திறமையான வழிவகைகள் ஏற்படுவதோடல்லாமல் திறமையான நிர்வாகம் மற்றும் அடிப்படை வசதி கட்டமைப்புகளும் உருவாகும்.

அடுத்த பத்து ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரத்தை 7 முதல் 8 சதவீதம் வளர்ச்சியடைய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக தொழில் முதலீட்டாளர்களை கவரும் சூழ்நிலையை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் அடிப்படை வசதிக் கட்டமைப்பிற்கு அதிகம் முன்னுரிமை வ்ழங்கப்படும்


பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டு முதலீடு அதிக அளவில் தேவை. அத்துடன் உள்நாட்டு முதலீடும் அவசியம் ஆசிய நாடுகள் மேற்கு திசை வளர்ச்சியை பார்க்கின்றன. நாங்கள் கிழக்கு திசை வளர்ச்சியை பார்க்கிறோம்.

மேற்கு வங்காளம், ஒரிசா, ஆந்திரா தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் துறைமுகங்களை மேம்படுத்தும்போது, தென் கிழக்கு ஆசியாவின் கடல் வழிதொடர்பை நாம் மீண்டும் பெற முடியும், வடகிழக்கு ஆசியாவின் தொழில் கட்டமைப்பு வசதியை மத்திய அரசு செய்துவருகிறது. அதேபோல் மாநில அரசுகள் தென் கிழக்கு ஆசியாவில் தங்களது தொழில் மற்றும் வர்த்தகத்தை வளர்க்க வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன்சிங் பேசினார்.

# வீரவணக்கம்

## 3 ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 25 - 10 - 1978



தாயக மண்ணில் 21 - 10 - 2001

## 02 ஆம் லெப்.இயூஜின்

தமிழீழ தேசியத் துணைப்படைவீரர்

செபமாலை மரியான் இயுஜின்

நி.மு.துர்க்கை அம்மன் கோவில் அருகாமை

அம்பாள்குளம் கிளிநொச்சி

**21.10.2001** அன்று மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"

(5199)

# வீடு வீடாகச் சென்று வாக்காளர் பதிவு

சென்னை உள்ளிட்ட 6 மாநகர ஆட்சிப்பகுதிகளில் வீடுவீடாகச் சென்று வாக்காளர் பட்டியலைத் தயாரிக்குமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.சமீபத்தில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் போது, பெருமளவில் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது தொடர்பாக, எழுந்த குற்றச்சாட்டுக்களையடுத்து இது குறித்து விசாரணை செய்ய தேர்தல் ஆணையம் விசாரணைக் குழுவை அமைத்தது.இக்குழு விசாரணை அறிக்கையினைக் கையளித்துள்ளதையடுத்து, 06 மாநகர ஆட்சிப்பகுதிகளில் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வீடுவீடாகச்சென்று பதிவுசெய்யுமாறுதேர்தல் ஆணையகத்தின் செயலர் பிரசாத் நேற்று முன்தினம் சென்னையில் இதனைக் கூறியுள்ளார்.

## க.வ.ப.நோ.கூ.சங்கம்,பரந்தன்(வ/து)

## நேர்முகப் பரீட்சை – 2004.10.23


2004.10.16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது சங்கத்தில் நடைபெறவிருந்த பிரதம இலிகிதர், காசாளர் ஆகிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டது. இந்நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 2004.10.23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது தலைமை அலுவலகத்தில் நடைபெறும். எனவே விண்ணப்பதாரிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
கரைச்சி வடக்கு பலநோக்கு
கூட்டுறவுச்சங்கம்,
பரந்தன்.

(சி-10279)

# நீங்காத நினைவில்

## 17ஆம் ஆண்டில் | 2ஆம் ஆண்டில்



மூத்த உறுப்பினர்

**லெப்.கேணல் சந்தோசம் மாஸ்ரர்**

(கணபதிப்பிள்ளை உமைநேசன்)

தாயின் மடியில் -04.10.1959
தாயக மண்ணில்-21.10.1987

முன்னாள் திருமலை மாவட்டத் தளபதி
பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞான பீடம் ஏறி
விடுதலைக்காக எழுந்த புலி -நீ
தலைவரோடொன்றி திருநெல்வேலி சமரில் நின்றாய்
திருமலை சென்று பகை வென்ற தளபதி
எம் திசை வந்த அந்நியரை திகை கொள்ள வைத்த தீரன்
உயிர் ஈந்து பதின்னேழு ஆண்டுகள் ஆகினும் உன்பாதச்
சுவடுகளைப் பற்றி எழும் உன் சந்ததி.



நாட்டுப்பற்றாளர் அமரர் உயர் திரு

**பண்டிதர் ப.கணபதிப்பிள்ளை**

(அரியாலை, யாழ்ப்பாணம்)

தாய்ப்பற்றுள்ளவராய் – 01.11.1927
தாயகப்பற்றாளராய்—22.02.2002

இறந்தும் இறவாப் புகழுடன் திகழும்
இணையில்லாத் தந்தையே!
சிறப்புச் செய்தீர்கள் செந்தமிழுக்கு
அறத்தின் வழியில் நின்று அனைவருக்கும்
ஆயகலைகள் உரைத்தீர்கள்
மறந்து தமிழர் வாழா மண்ணின்
மானம் காத்திட நன்மக்களை உவந்தீர்கள்
திறம்பட உழைத்து தேசம் விடிந்திடக்
காட்டிய உறுதியால் நாட்டுப்பற்றாளராகினீர்
உறங்க மறுக்கும் உள்ளத்தில் உங்கள்
நினைவுகளைச் சுமந்து நிற்கின்றோம் நாங்கள்.

(5163) குடும்பத்தினர்

## சிறிலங்கா-பாகிஸ்தான் முதல் டெஸ்ட்


# திலான் சமரவீர சிறப்புத் துடுப்பாட்டம் நெருக்கடியிலிருந்து மீண்டது சிறிலங்கா

சிறிலங்கா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பைசலாபாத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதலில் துடுப்பெடுத்தாடும் சிறிலங்கா அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சிறிலங்கா அணி ஆரம்பத்தில் தடுமாறியிருந்தாலும் கூட திலான் சமரவீரவின் சிறப்பான துடுப்பாட்டம் காரணமாக ஸ்திரமான நிலையை பெற்றுள்ளது. திலான் சமரவீர ஆட்டமிழக்காது 97 ஓட்டங் களையும், ரங்கணகேரத் 23 ஓட்டங்களையும் பெற்று களத்தில் இருந்தனர். அத்தப்பத்து,ஜயவர்த்தன ஓட்டமெதுவும் பெறாமலும், சங்கக்கார இரண்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஜெயசூரிய 35 ஓட்டங்களையும், முபாரக்34 ஓட்டங்களையும்,சமிந்தவாஸ் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அக்தர்,சமிதலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## நாக்பூர் டெஸ்ட் போட்டியில் பங்கேற்பேன் என்கிறார் சச்சின்



அவுஸ்திரேலியாவிற்கு எதிரான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆடுவேன் என்று டெண்டுல்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். 24ஆம் திகதி அவருக்கு மீண்டும் உடற் பரிசோதனை நடக்கிறது.

இந்த நிலையில் நாக்பூரில் வருகிற 26ஆம் திகதி தொடங்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் ஆடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. போட்டி தொடங்கும் முன்னதாக 24ஆம் திகதி டெண்டுல்கருக்கு மீண்டும் உடல் பரிசோதனை நடத்தப்படுகிறது. இதில் உடல்தகுதி பெற்றால் 33ஆவது டெஸ்டில் டெண்டுல்கர் ஆடுவார். இதற்கிடையே டெண்டுல்கர் நேற்று முன்தினம் காலையில் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபடடாா. சுமார் 2மணி நேரம் அவர் பயிற்சி செய்தார்.

இதுகுறித்து டெண்டுல்கர் கூறுகையில் 3ஆவது டெஸ்டில் ஆட ஆர்வமுடன் உள்ளேன். காயம் காரணமாக ஆட முடியாததால் வீரர்கள் உடை மாற்றும் அறையில் காத்திருந்து, காத்திருந்து களைத்துப்போய்விட்டேன். அப்படிக் காத்து இருப்பது எவ்வளவு வருத்தம் அளிக்கும் என்பது எனக்குத்தான் தெரியும் என்றார்.

## சச்சினே சிறந்தவர் — கெய்ன்ஸ

கவாஸ்கரை விடவும் சச்சினே சிறந்த துடுப்பாட்ட வீர் எனகிறார் கிறிஸ் கெய்ன்ஸ் தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் கிறிஸ் கெய்ன்ஸ் மும்பை வந்துள்ளார்.

நிருபர்களுக்கு அவர் நேற்று அளித்த பேட்டியில்.

சுனில்கவாஸ்கர் சிறந்த வீரர். கடந்த காலத்தின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களுக்கு எதிராக ஹெல்மெட்கூட அணியாமல் விளையாடியிருக்கிறார். ஆனாலும், என்னைப் பொறுத்தவரை. சச்சின் டெண்டுல்கர்தான் சிறந்த துடுப்பாட்டவீரர். கவாஸ்கருடன் நான் விளையாடியதில்லையே தவிர அவர் விளையாட்டை தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறேன். அதேசமயம். சச்சினுடன் நான் விளையாடியிருக்கிறேன். அந்த அனுபவத்தில் கவாஸ்கரை விட சச்சின் சிறந்தவர் ஓட்டம் எடுக்கும் வேகம் வித விதமான அடிகள் என்று சச்சினிடம் நிறைய விடயங்கள் இருக்கின்றன என்று 'வம்பிழுக்கிறார்' கெய்ன்ஸ்.


## மும்பை டெஸ்ட் போட்டியில் பொண்டிங் பங்கேற்கும் வாய்ப்பு



இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே மும்பையில் வரும் நவம்பர் 3 ஆம் திகதி தொடங்கும் 4 ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கிபொண்டிங் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கைவிரலில் ஏற்பட்ட எலும்பு முறிவிலிருந்து அவர் தேறி வருவதாகவும் மும்பை டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடும் வாய்ப்பு உள்ளதாகவும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்தின் மருத்துவர் பொண்டிங்கை திங்கட்கிழமை சோதித்தார். கடந்த முறை அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே சோதனையை விடத் தற்போது மிகவும் தேறியுள்ளார். விரைவில் அவர் மீண்டும் விளையாடுவார் என்றார் டாக்டர் இயான் ஹார்கிரீவ்ஸ். இந்த வார இறுதிக்குள் தயாராகிவிடுவேன் மும்பை டெஸ்ட் போட்டியில் விளையாட ஆவலாக உள்ளேன் என்று. பொண்டிங் நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

## டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதே குறிக்கோள் அவுஸ். அணித்தலைவர் கில்கிறிஸ்ட் சவால்



இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரைக் கைப்பற்றுவதே குறிக்கோள் என்று அவுஸ்திரேலிய அணித்தலைவர் கில்கிறிஸ்ட் சவால் விட்டுள்ளார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தற்போது இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 4 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்தப் பயணத்துக்கு பின்னர் 2010 ஆம் ஆண்டு தான் அவுஸ்திரேலிய அணி மீண்டும் இந்தியாவுக்கு வந்து விளையாடவுள்ளது. இதில் என்ன விசேசம் என்றால். 2010-இல் அவுஸ்திரேலிய அணி இந்தியா வரும்போது தற்போது அணியில் இடம் பெற்று உள்ள முன்னணி வீரர்களில் மைக்கேல் கிளார்க்கை (23வயது) தவிர மற்ற யாரும் அப்போதைய அணியில் இருக்க மாட்டார்கள் என்பதுதான். அதே போல் இந்திய அணி 2007-2008 ஆம் ஆண்டுதான் அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாட உள்ளது. அப்போது இந்திய அணியில் கங்குலி, டெண்டுல்கர், ராவிட், கும்ளே, போன்றோர் இடம் பெற வாய்ப்பு மிக மிகக் குறைவு தான். தொடரைக் கைப்பற்றுவோம் 6 ஆண்டுகளுக்கு பிறகு தான் அவுஸ்திரேலிய அணி மீண்டும் இந்தியா வரும் என்பதால் தற்போதைய டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதில் அந்த அணிஅதிக முனைப்புடன் உள்ளது என்றார்.




## அடுத்த இரு டெஸ்ட் போட்டியையும் வென்று தொடரைக் கைப்பற்றுவோம் –கங்குலி நம்பிக்கை



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அடுத்த இரண்டு கிரிக்கெட்டெஸ்ட் ஆட்டங் களையும் வென்று தொடரை வெல்லக்கூடிய திறமையை இந்தியா பெற்றுள்ளது என்று அணித் தலைவர் சௌரவ் கங்குலி நம்பிக்கை தெரிவித்தார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சென்னையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா மிகச்சிறப்பாக ஆடியது. அதுபோன்ற ஆட்டத்தைத் தொடர்ந்து அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெளிப் படுத்தி தொடரைக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார் அவர். சென்னையில் இருந்து செவ்வாய்க் கிழமை கொல்கத்தா வந்த அவர் நிருபர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். முழங்கை வலி காரணமாக முதல் இரண்டு போட்டிகளிலும் விளையாடாத சச்சின்டெண்டுல்கர் நாக்பூர் போட்டியில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கிறேன். தற்போது வலியிலிருந்து அவர் மீண்டு வருகிறார் என்றார் கங்குலி. நான்கு போட்டிகள் கொண்ட தொடரில் பெங்களூரில் நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 217 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. சென்னை ஆட்டம் மழையின் குறுக்கீடு காரணமாக சமநிலையில் முடிந்தது. இதனிடையில் 3ஆவது ஆட்டம் நாக்பூரிலும், 4ஆவது ஆட்டம் மும்பையிலும் நடைபெறுகிறது.

## இரண்டாவது டெஸ்டில் மழை குறுக்கிட்டது கடவுள் தந்த தண்டனை–மெக்ராத்

சேப்பாக்கம் டெஸ்ட் முடிந்த விதம் மிகவும் ஏமாற்றளிக்கிறது. மழை பெய்யாமல் இருந்திருந்தால் யார் இந்தப் போட்டியை ஜெயித்திருப்பார்கள் என்று கணிக்க என்னால் முடியாது.என கிளென் மெக்ராத் தெரிவித்துள்ளார். அதேசமயம் எங்களுக்கு அதிக வாய்ப்புகள் இருந்தன என்று உறுதியாகச் சொல்ல முடியும். நான்காவது இன்னிங்சில் இந்திய அணி எவ்வளவு ஓட்டங்களை இங்கு 'சேஸ்' செய்து ஜெயித்திருக்கிறது என்ற கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாலே முடிவு தெரிந்துவிடும் கடந்த முறை எங்களுக்கு எதிரான டெஸ்டில் 155 ஓட்டங்களை 'சேஸ்' செய்யவே இந்தியா நிறையத் திணற வேண்டியிருந்தது. அப்படி இருக்கையில் 230 ஓட்டங்கள் என்ற இலக்கு நிச்சயம் சவாலானதுதான்.

தவிர இந்தியத் துடுப்பட்ட வீரர்களில் பொரும்பாலானோர் தங்கள் திறமையை வெளிப்படுத்தத் திணறுகின்றனர்.இதுவும் எங்களுக்குச் சாதகம். வீரேந்தர் சேவாக் அருமையாக ஆடினார். மழை இல்லாமல் இருந்தால் அவரது ஆட்டம் இந்தியாவை வெற்றி பெறச் செய்திருக்கும் என்று சிலர் சொல்லலாம் ஆனால் மறுமுனையில் விழும் ஒவ்வொரு விக்கெட்டும் இந்திய அணிக்கு நெருக்கடியை மேலும் .மேலும்அதிகரிக்கும் என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.மழை பெய்து ஆட்டம் முடிந்ததால் இப்படியெல்லாம் கணிப்புகள் வெளியிட வேண்டியிருக்கிறது.மொத்தத்தில் இது அருமையான மறக்க முடியாத டெஸ்ட். என்னைப் பொறுத்தவரை மழை என்பது கடவுள் கொடுத்த தண்டனை என்றே நினைக்கிறேன். இரு அணி வீரர்களும் சென்னை வெயில் மிக அதிகம் என்று நிறையப் புகார் தெரிவித்தோம் அதிக வெப்பம் நிலவியதால் அடிக்கடி 'ஒய்வு' எடுத்துக் கொண்டோம். இதெல்லாம் கவனித்த கடவுள் கடைசி நாளில் மழை பெய்ய வைத்துவிட்டார் என்று நினைக்கிறேன்!

## டென்னிஸ் மைதானத்தில் நவீன யுத்தி

டென்னிஸ் மைதானங்களில் போட்டிகளின் போது வீரர்-வீராங்கனைகளால் அடிக்கப்பட்டு சிதறி ஓடும் பந்துகளை எடுத்துப் போடுவதற்காக சிறுவர் அல்லது சிறுமிகள் நியமிக்கப்பட்டு இருந்தனர். இதுவரை அவர்களும் தங்களது பணியை செவ்வனே செய்து வந்தனர். மாடல் அழகிகள் அதில் தற்போது புதுமையையும் கவர்ச்சியையும் புகுத்தியுள்ளனர்.

## கிராண்ட் ஸ்லாம் கிண்ணம் வெல்வதே எனது இலட்சியம் –டேவன் போர்ட்

அமெரிக்காவில் நடைபெற்ற கிரெம்லின் கிண்ண டென்னிஸ் போட்டியை வென்ற லின்ட்சே டேவன்போர்ட் கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தில் கண் வைத்துள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கும் போது இத் தொடரில் முதலாவது இடத்திற்கு வரும் நோக்கில் தான் ஆட வில்லை எனினும் அது தனக்கு பெருமையளிப்பதாகக் கூறினார்.

மூன்று கிராண்ட்ஸ்லாம் கிண்ணப்போட்டிகளில் ஆடியிருந்தாலும் வெற்றிவாய்ப்பு நழுவி விட்டது எனக் கூறிய அவர்

விம்பிள்டன் போட்டியையும் அமெரிக்க ஓபன் போட்டியையும் வென்றுள்ளதாகத் தெரிவித்தார். எனினும் மீண்டும் ஒரு முறை அவுஸ்திரேலியா கிராண்ட்ஸ்லாம் போட்டியில் பங்கெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கின்றார். -

## தமிழீழ தேசிய கராத்தே போட்டி–2004 நாளை மறுதினம் கிளியில் ஆரம்பம்

தமிழீழ விளையாட்டுத் துறையால் தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த 3ஆவது தேசிய கராத்தேப் போட்டி நாளை மறு தினம் ஆரம்பமாகின்றது.

கிளி.பொது விளையாட்டு மைதானத்தில் இரண்டுநாள் நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டியில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட சிறந்த வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

எனவே தம்மால் அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபத்தின்படி போட்டியாளர்களை தயார்படுத்திக்கொள்ளுமாறு அனைத்துக் கராத்தே சங்கத்தினரையும் தமிழீழ விளையாட்டுத்துறை கேட்டுள்ளது.

மேற்படி போட்டியின் பிரதம தீர்ப்பாளராக இலங்கையின் கராத்தேக் கலையின் தந்தையான சீகான் பொனிறொபேட் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.


## ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் காலப்ந்துச் சுற்றுப் போட்டி

ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் நடாத்தும் அமரர் பசுபதி, அமரர் ப.செந்தூரன் ஞாபகார்த்த மாபெரும் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக ஸ்கந்தா விளையாட்டுக்கழகத்தினர் அறிவித்துள்ளனா.

25 கால்பந்து அணிகள் கலந்து கொள்ளும் இச்சுற்றுப்போட்டி நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை தொடர்ச்சியாக நடைபெறும் எனவும் அதேபோன்று 23,24ஆம் திகதிகளில் லீக் போட்டிகள் நடை பெற்று அரையிறுதி, இறுதிப் போட்டிகள் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

22ஆம் திகதி 1-7 வரையான போட்டிகளும், 23ஆம் திகதி 8-14வரையான போட்டிகளும்,24ஆம்திகதி 15-21 வரையான போட்டிகளும்,25ஆம் திகதி 22-24வரையான போட்டிகளும் நடைபெறவுள்ளன. போட்டிகள் அனைத்தும் தமிழீழ விளையாட்டுத்துறையின் விதிமுறைகளுக்கு அமைய நடைபெறும்.

## சிந்தனைக்கு



உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் - அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 21-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## பக்கச் சார்பு!

இந்தியாவிற்கும்–சிறிலங்காவிற்கும் இடையிலான பாதுகாப்ட ஒத்துழைப்பு உடன்பாடு குறித்த பேச்சுவார்த்தைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இன்னும் இரண்டு மாதகாலப்பகுதிக்குள் இவ் உடன்பாடு கையெழுத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிலங்காவிற்கும்–இந்தியாவிற்கும் இடையிலான இப்பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டிற்கு எத்தகைய காரணங்களையும், விளக்கங்களையும் கூறிக்கொண்டாலும், அடிப்படையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் சிறிலங்கா அரசு இராணுவ ரீதியில் தன்னைப் பலப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தைக் கொண்டது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. அதாவது சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தினை இராணுவ ரீதியில் தோற்கடிக்கும் வகையில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் மேற்கொள்ளும் நடவடிக்கையே இதுவாகும்.

இப்பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு கையொப்பம் இடப்படும் பட்சத்தில் ஏற்கனவே பல சிக்கல்களுக்கும் பெரும் நெருக்கடிக்கும் உள்ளாகியுள்ள. இனப்பிரச்சினை விவகாரத்தில் இவ் உடன்பாடு எத்தகைய பங்கு வகிக்கப்போகின்றது என்பது முக்கியமான விடயமாகும். ஏனெனில் இது ஏற்கனவே சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிலவும் இராணுவச் சமநிலையை மாற்றத்திற்கு உள்ளாக்கக்கூடியதாகும்

இந்நிலையில் இவ் உடன்பாடு உடனடியாகவே நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தத்தில் கூட தாக்கத்தை விளைவிக்கத்தக்கதாக இருக்கும் என்றே எதிர்பார்க்க முடியும். ஏனெனில் தற்போதைய யுத்த நிறுத்த உடன்பாடானது சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இராணுவச் சமநிலையே அடிப்படையாகக் கொண்டதாகும். இதனை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் உட்பட அனைவருமே ஏற்றுக்கொணடுள்ளனர்.

ஆகையினால் சிறிலங்கா இந்தியப் பாதுகாப்பு உடன்பாடானது சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பை பல்வேறு வழிகளிலும் பலப்படுத்துவதாக அமையும்நிலையில் இராணுவச் சமநிலை மாற்றத்திற்கு உள்ளாவதற்கும், இதனால் யுத்த நிறுத்தம் பாதிப்பிற்குள்ளாவதற்குமான வாய்ப்பு நிரம்பவே உள்ளது. ஏற்கனவே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத நிலையில் இருக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசிற்கு இது பெரும் வாய்ப்பானதாகிவிடும்.

சிறிலங்கா அரசும் சரி, இந்திய அரசும் சரி சமாதான முயற்சிகளுக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டிற்கும் இடையில் தொடர்பு எதுவும் இல்லை எனக் கூறிக்கொள்ளலாம். ஆனால் இப்பாதுகாப்பு உடன்பாடு கைச்சாத்தாகுமானால், ஏற்கனவே இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா மத்தியஸ்தராகவோ, ஏற்பாட்டாளராகவோ செயற்படமுடியாமல் உள்ளமைக்கான காரணிகளுடன் இதுவும் சேர்ந்து இந்நிலையில் மேலும் வலுவடையக் கூடியதாகவே இருக்கும்.

இனப்பிரச்சினை விடயத்தில் இந்திய அரசின் அணுகுமுறை தொடர்பாக தெளிவான உத்தியோக பூர்வமான அறிவிப்பு ஒன்றும் கிடையாது. இனப்பிரச்சினைத் தீர்விற்கு நோர்வே மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்பதே அதன் வெளிப்படையான அறிவிப்பு. இதற்கு அப்பால் தனது நிலைப்பாட்டை இந்தியா வெளிப்படுத்திக்கொள்வதில்லை.

ஆனால் இந்திய அரசு சிறிலங்கா ஆட்சியாளர்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருப்பது வெளிப்படையானது. இந்திய உயர்மட்டக்குழுக்கள் சிறிலங்காவிற்கு விஜயம் செய்வதும் இந்திய ஆட்சியாளர்கள் அடிக்கடி டில்லிக்குச் சென்று வருவதும் சாதாரணமானது.

ஆகையினால் இந்தியாவின் வெளிப்படையான அறிவிப்புக்களுடன் மட்டும் இனப்பிரச்சினை தொடர்பான அதன் நிலைப்பாடு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்து விடமுடியாது. அதற்கு அப்பாலும் மிக நெருக்கமான உறவு நிலையில் இந்திய அரசு உள்ளது என்பது ஆய்ந்தறிய வேண்டிய ஒன்றல்ல. அத்தோடு இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அரசு நடுநிலையான நிலைப்பாடு கொண்டதாகவும் இல்லை. இதனை இலங்கைக்கான இந்தியத் தூதுவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களே நிருபிக்கப் போதுமான வையாகவுள்ளன.

இந்நிலையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு கைச்சாத்தாகும் பட்சத்தில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அரசு ஒரு பக்கம்சார்பானதான நிலைப்பாட்டை மேற்கொள்வது உறுதிசெய்யப்பட்டதாகிவிடும். ஆகையினால் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பன தவிர்க்கமுடியாது கேள்விக்குள்ளாகிவிடும்.

இதனால் இப் பாதுகாப்பு ஒப்பந்தம் எப்பொழுது இலங்கை இனப்பிரச்சினையில் தலையீடாக மாறுகின்றதோ அதாவது சிறிலங்கா அரசினைப் பாதுகாக்கும் நோக்கில் இராணுவரீதியில் செயற்பட ஆரம்பிக்கப்படுகின்றதே அன்று முதல் இனப்பிரச்சினைக்கான தீர்வில் மேலும் ஒரு சிக்கல் நெருக்கடி உருவாகின்றது என்றே கொள்ளலாம். இது தீர்க்க முடியாதுள்ள இன நெருக்கடியை மேலும் சிக்கலுக்குள்ளாக்குவதாகவே இருக்கும்.

# அனைத்து மதங்களுக்குமான பாதுகாப்புச் சட்டம் தயாரிப்பு.

(கொழும்பு)

அனைத்து சமயங்களுக்குமான பாதுகாப்புச் சட்டங்களை சிறிலங்காவின் புத்தசாசன அமைச்சு விரைவில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தவுள்ளது.

சகல சமயங்களின் குறியீடுகள் மற்றும் அனுட்டானங்களுக்கு மதிப்பளிக்கவும் அவற்றைப் பேணிப்பாதுகாக்கவும் இச்சட்டங்கள் வழிவகுக்கும் எனவும், வர்த்தக ரீதியில் சமயக் குறியீடுகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை இவை தடுக்கும் என்றும் புத்தசாசன அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சமயங்கள் பாதுகாப்புச் சட்டம் பூர்த்தியடைந்திருப்பதாக சட்ட வரைஞர்கள் தமக்கு அறிவித்திருப்பதாவும் தெரிவித்துள்ளார்.

# கொலன்னாவ சுமங்கலதேரரின் பதவி விலகலை ஏற்க மறுப்பு

ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிலையில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சுமங்கல விலகுவதாகத் தெரிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தெரிவித்துள்ளார் கொலன்னாவ சுமங்கல தமது பதவி விலகல் தொடர்பாக அனுப்பிய கடிதம் தொடர்பில் மேதானந்த பதிலை அனுப்பிவைத்துள்ளார்

பாராளுமன்ற உறுப்பினர் நிலையில் இருந்து ஏற்கனவே விலகியுள்ள சுமங்கல கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவீயில் இருந்தும், அரசியலமைப்பு சபையில் இருந்தும் விலகுவதை அனுமதிக்க முடியாது என தமது பதிலில் தெரிவித்துள்ளார்

இதேவேளை தாம் ஒரு போதும் பாராளுமன்ற உறுபபினர் நிலையில் இருந்து விலகப் போவதில்லை என உடுவே தம்மாலோக தெரிவித்துள்ளார் நேற்று ஊடகங்களுக்கு செவ்வியளித்த அவர், தாம் சிஹல உறுமயவின் தலையீடு தொடர்பில் கருத்து வேறுபாட்டைக் கொண்டுள்ள போதிலும், தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகப்போவதில்லை என உடுவே தம்மாலோக குறிப்பிட்டுள்ளார். (32)

# கொத்மலை, நுரைச்சோலை மின் நிலையங்கள் துரிதமாக நிர்மாணிக்க வலியுறுத்திப் போராட்டம்

(கொழும்பு)

கொத்மலை நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையங்களை துரிதமாக நிர்மாணிக்கும் படி கோரி இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

கொழும்புக் கோட்டையில் உள்ள மின்சாரசபை அலுவலகத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் மின்சாரசபை தொழிற்சங்கக் கட்டமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது..

# கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தால் பார்வையிழந்தவர் நஷ்டஈடு கோரல்

(கொழும்பு)

பொலிசார் நடத்தியகண்ணீர்ப் புகைபட பிரயோகத்தினால் தனது கண்ணொன்று பார்வையற்றுப் போனதாகவும் இதற்கு நஷ்ட ஈடு வழங்கக்கோரியும் கடை உரிமையாளர் ஒருவர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ளார்.

பொரளை 'சுப்பர்மார்க்கெட்' கடை உரிமையாளரான அல்பிரட்டி அல்விஸ் என்பவரே இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த 2001ஆம் ஆண்டு யூலை 19இல் தேசியக்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் பொலிசார் திடீரென மேற்கொண்ட கண்ணீர்ப்புகை குண்டொன்றின் போது கண்ணீட்புகைக் குண்டொன்றின் வெற்று உறை தனது இடது கண்ணில் தாக்கியதாகவும் தொடர்ந்து ஒகஸ்ட் 9ஆம் திகதி வரை கொழும்பு தேசியவைத்திய சாலையில் சிகிச்சை பெற்றபோதும் தனது இடது கண் பூரணமாகப் பார்வையிழந்துள்ளதாகவும் முகத்திலும் தலையிலும் ஏற்பட்ட காயங்கள் வருத்தியதாகவும குறிப்பிட்ட அக்கடை உரிமையாளர் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், கொழும்பு தெற்குப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட ஏழுபேரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது கண் இழப்பிற்காக ஆறுமில்லியன் ரூபாய்களை நட்ட ஈடாகப் பொலிசாரிடமிருந்து பெற்றுத்தரவேண்டும் எனவும் அவர் முறையிட்டுள்ளார்.

## எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர் புறக்கணிப்புப் போராட்டத்திற்கு ஏற்பாடு

எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபடுவது தொடர்பாக இன்று தீர்மானம் மேற்கொள்ளவுள்ளனர் கூட்டுத்தாபனத்தின் ஒரு வீத பங்கு தனியாருக்கு விற்பனை செய்யப்படக்கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஏற்கனவே சுமார் 6 தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ள போதும், அதற்கு அரசாங்கம் இதுவரை பதிலளிக்காமையை ஆட்சேபித்தே பணிப்புறக்கணிப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (32)

# சிறிபாத கல்வியல் கல்லூரியின் மாணவரின் உண்ணாவிரதம் முடிவு

பத்தனை சிறிபாத கல்வியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்கள் 63 பேர் மேற்கொண்டு வந்த உண்ணா விரதப் போராட்டம் நேற்று மாலை விலக்கிக்கொள்ளப்பட்டது இந்த போராட்டம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து கல்வியற் கல்லூரிகளின் ஆணையாளர் ரூபா கஜநாயக்க மற்றும் பத்தனை கல்வியற் கல்லூரியின் அதிபர் சித்ராடி சில்வா ஆகியோர் விசாரணைகளை நடத்தி அளித்த முடிவின் பின்னரே இந்த உண்ணா விரதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக எமது நோர்வூட் செய்தியாளர் தெரிவிக்கிறார். (32)

# சவுதி அரேபிய வாகன விபத்தில் 4இலங்கைப் பெண்கள் பலி

சவுதி அரேபியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் இலங்கைப் பெண்கள் நால்வர் பலியாகினர் நிறுவன வாகனம் ஒன்றில் சுமார் 4 பங்களாதேஷ் பெண்கள் உட்பட 41 இலங்கை பெண்கள் சென்ற வேளையில் அது ரியாத் நகரில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த நிலையில் விபத்தில் திலக்சி பிரியதர்சினி, அனுலா நீலாகாந்தி, அனுஸ்கா டில்ருக்ஸி மற்றும் பிரீத்திகா ஆகியோரே பலியாகியவர்களாவர். இந்த சம்பவத்தில் மேலும் 20 பேர் வரை காயமடைந்தனர் (32)

## பொதுக் கூட்டம்

அகில இலங்கை தமிழ் பேசும் உப தபாலதிபர்கள் தொழிற்சங்கம் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27.10.2004 புதன்கிழமை காலை. 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் அஞ்சல் அலு வலகத்தின் தலைவர். எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. எனவே அங் கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி தொழிற்சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (14)

# கலாச்சாரத்தைச் சீரழிக்கும் நடவடிக்கைகள் வவுனியாவில் இனங்காணப்பட்டுள்ளன

## நடவடிக்கை எடுக்கப்படும்மென அரசியல்துறை எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையில் சிலர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர் வவுனியா நகர் பகுதியில் அமைந்துள்ள விடுதியில் நான்கு பெண்கள் தங்கி இருந்து விபச்சார நடவடிக்கையில் ஈடுப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்ததை அடுத்து தாங்கள் அவர்களைக் கைது செய்து எச்சரித்து விடுதலை செய்து இருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர் தாங்கள் அரசியல் நடவடிக்கைக்காக வவுனியாவுக்கு வருவதற்கு முன்னர் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வந்ததாகவும் தற்போது இவ்வாறான ஒரு சம்பவம் இடம் பெற்று இருப்பது கவலைக்குரிய தாக இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளனர். இந்த நான்கு பெண்களும் பிறமாவட்டத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது அத்துடன் வவுனியா குட்செட்வீதி தேக்கவத்தை போன்ற பிரதேசங்களில் போதை பொருள்விற்பனை செய்வதாக தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் வவுனியா அரசியல் துறையினர் தெரிவிக்கின்றனர். (21)

# மருதானையில் மருந்தகம் ஒன்றை கொள்ளையிடச் சென்றோர் கைது

## அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்களாம்

மருதானை மருந்தகம் ஒன்றைக் கொள்ளையிடச் சென்ற நால்வரை நேற்று முன்தினம் மருதானைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று மாளிகாகந்த நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் அதி தீவிரமான அரசியற் கட்சியுடன் தொடர்பு பட்டவர்கள் எனவும், அதில் ஒரு வர் அந்தக் கட்சியின் முன்னாள் முக்கியஸ்த்தர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்ட வேளை ஒரு சுடு கருவியும் இருந்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. (32)

# வர்த்தகர் சுட்டுக் கொல்லப்பட்டபின் வீட்டிலிருந்த பணம் நகைகள் கொள்ளை

(கொழும்பு)

வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட பின் அவரது வீட்டிலிருந்து பணம் நகைகள் என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று சிறிலங்காவின் எல்பிட்டிய பொலிஸ் பிரிவில் உள்ள கள்ள பொல என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

கங்கம அமரசிறி என்ற வர்த்தகர் இனம் தெரியாத இரண்டு நபர்களால் சுட்டுக்கொல் லப்பட்டார்.

பின் இவரது மனைவி, பிள்ளைகள் மிரட்டிய ஆயுததாரிகள் வீட்டிலிருந்த சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் ரொக்கப் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் புதுக்கமம் கிராமத்தில் பொது மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்

(மன்னார்)

மன்னாரின் புதுக்கமம் கிராமத்தில் ஐய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி போன்ற கட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று இடம்பெற்றது

இந்நிகழ்விற்கு ஐய்க்கா நிறுவனத்தின் பணிப்பாளர் ஈசா, இணைப்பாளர் யசோ, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன், மன்னார் பிரதேச செயலாளர் உட்படப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (மி)

# கண்டாவளைப் பி.செயலகத்தில் முதியோர் வார நிகழ்வுகள்

கண்டாவளைப் பிரதேச செயலகத்தினால் முதியோர் வார நிகழ்வுகள் கடந்த 15ஆம் திகதி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் பி.ப.2.30 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது சமூக சேவை உத்தியோகத்தரின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கண்டாவளைக் கோட்ட மட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் 37 பேருக்கு சான்றிதழ்களும், சிறப்புப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அடுத்து ஒவ்வெரு கிராம சேவகர் பிரிவிலும் ஒவ்வொரு முதியவர்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தம்16 பேர் கௌரவிக்கப்பட்டு உடுபுடவைகள் பரிசில்கள் வழங்கப்பட்டன இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் வீ. இராஜகுலசிங்கம், க.வ.ப.நோ.கூ.ச.தலைவர் ம.நடராசா ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்கள் வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்வில் கி.அ.சங்கம், மாதர் சங்கம் உறுப்பினர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (14)

## வீர வணக்க...

வட்டம் இன்று அவரது இல்லத் திற்கு கொடுக்கப்பட்டு நாளை விசுவமாடு. மாவீரர் துயிலும் இல் லத்தில் நினைவுக்கல்தீரைநீக்கம் செய்யப்படும்.

## யாழ்...

(வயது63) செல்வி.கே.கவிதா (வயது19) எஸ்.பிரசாந் (வயது 23) என்.நடராசா(வயது 43) ஆகியோரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (33,27)

# இடைநிறுத்தம்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிச் பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் இன்று முதல் நடாத்துப் பெறவிருந்த காணி விசாரணைகள் சம்பந்தமான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கனாதன் தெரிவித்துள்ளார்

மேற்படி காணி விசாரணை சம்பந்தமான கூட்டம் நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார் (சோ.கு)

# கொடுப்பனவு வழங்கல்

(மன்னார்)

மன்னாரில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து நாடு திரும்பி மீளக்குடியமர்ந்தவர்களுக்குரிய கொடுப்பனவாக 25ஆயிரம் ரூபாவினை மன்னார் மக்கள் வங்கி, இலங்கை வங்கி மூலம் "நிகொட்" நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதற்கென மொத்தமாக 10 இலட்சம் ரூபா வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மி)

## வெவ்வேறு...

19.10.2004 அன்று மட்டு அம்பாறை மாவட்டத்தில் ஐயங்கேணிப்பகுதியில் தேசத் துரோகி கருணாகுழுவினரால் சுடப்பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்-கணேசமூர்த்தி(கதிர்காமத்தம்பி-கணேசமூர்த்தி பாரதிபுரம் ஐயங்கேணி செங்கலடி ,மட்டக்களப்பு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வல்வெட்டி...

கடற்படையினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. கடற்படையினரது இவ்வாறான இழுபறி நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகள் என்பவற்றால் விசனமடைந்த அப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் ஒன்று கூடி நேற்று வல்வெட்டித் துறை கடற்கரைகளில் படையினரது அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது வான்தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை வல்வெட்டி துறைகடற்கரையில் படையினர் வான் தோண்ட அனுமதி மறுத்தமைகுறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் சங்க சமாசம் முறையிட்டுள்ளது. (33)

# சுதந்திரப் பறவைகள் ஏடு இன்று வெளிவருகிறது

பெண்கள் வாழ்வில் மாற்றமே புதிய தலைமுறையின் ஒளிமயமான எதிர்காலம் என்ற பிரதான தலைப்புச் செய்தியுடன் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் ஏடு இன்று வெளிவருகிறது.

ஆவணி-புரட்டாதி மாத இதழான இது 2 ஆம் லெப் மாலதியின் உருவச்சிலை. பெண்களுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி போன்ற வர்ணப்படங்களுடன் வெளிவருகின்றது. அத்துடன் மனங்களைத் திறப்போம் வாசல்கள் திறக்கும் என்ற தலைப்பில் கருணாகரனும் சிகரங்களைத் தொட்டபின்னும் பெண்இன்றும் என்ற தலைப்பில் தீபாவும் தமிழீழ மக்களுடன்.. என்ற தலைப்பில் செ.புரட்சிகாவும், தேவை இன்றொரு தூய்மையாக் கும் கருவி என்ற தலைப்பில் அம் புலி எழுதிய கவிதையும், வேண்டும் இங்கு சட்டவிழிப்புணர்வு என்ற தலைப்பில் பா.றுஜினாவும் வளரிளம் பருவம் என்னும் விசித்திர உலகில் என்ற தலைப்பில் அர்த்தநாரியும், மாறாத வடுக்களாய் என்ற தலைப்பில் அலைஇசையும், பதுங்கிச்சுடுபவள் என்ற தலைப்பில் அ.காந்தாவும், இப்படியும் சில என்ற தலைப்பில் யசோ மோகனும், பெண்களும் மனித உரிமைகளும் என்ற தலைப்பில்அருணா ஞானதாசனும், நிமிர்வு என்ற விமர்சனத்தையும் தாங்கி இந்தப் பத்திரிகை இன்று வெளிவருகின்றது.

# சூரிய வெளிகிராமப் பெண்களுக்கு ஒருநாள் ஆராய்வுப்பயிற்சி

கடந்த வியாழக்கிழமை அன்று நாவாந்துறை, சூரியவெளி கிராமத்து இளம்பெண்களுக்கு "ஆற்றலைத்தேடி" ஒரு நாள் அரங்கக் களப்பயிற்சி பெண்கள் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது. தம்மையும் தமது கிராமப் பண்பாட்டையும் மேம்படுத்தும் விருப்பம் மிகுந்தவர்களாக இவர்களை உருவாக்குவது பெண்கள் பண்பாட்டு மையத்தால் நடத்தப்பட்ட இப்பயிற்சியின் நோக்கமாக இருந்தது. பயிற்சி முடிவில் இவர்கள் பல யோசனைகளை வெளிப்படுத்தினர். கிராமப் பிள்ளைகளை பாடசாலைக்குப் போக ஊக்குவித்தல், ஒதுங்கியிருக்கும் பெண்களை வெளிச்சத்துக்குகொண்டு வருதல், ஊரில் உள்ள பிரச்சினைகள் தேவைகளை ஆய்வு செய்து அவற்றை உரிய இடங்களில் வெளிப்படுத்துதல் போன்ற ஆரோக்கியமான வேலைகளைச் செய்யும் முனைப்புடன் உறுதி பூண், சூரியச்செல்விகள் என்ற பெயரில் ஒரு குழுவாக இயங்க முன்வந்துள்ளனர். யாழ்-பல் கலைக்கழக நாடகத்துறை மாணவிகள் யாழினி,நிரூபா ஆகியோர் தமது பட்டப்படிப்புக்கான செயற்றிட்டமாக இக்கிராமத்தில் வேலை செய்து மேற்படி அரங்கப் பயிற்சிப் பட்டறையினை ஒழுங்கு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கிழக்கைப்பிரிக்க தேசிய மட்டத்தில் நடவடிக்கை

## -ஜாதிக ஹெல உறுமய மேற்கொள்ளுமாம்

தற்பொழுது இணைக்கப்பட்டுள்ள வடகிழக்கை மீண்டும் பிரிப்பதற்கு தேசிய மட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரத்தினதேரர் குறிப்பிட்டுள்ளார்.வடகிழக்கைப் பிரிக்க வேண்டும் என்பதே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசியக் கொள்கை எனவும்இதை நடைமுறைபடுத்துவதே கட்சியின் பிரதான நோக்கம் என்றும்,இதை மக்களுக்கு அறிவிக்கப் போவதாகவும் தெரிவித்ததோடு இது சம்பந்தமாக இன்று புறக்கோட்டை அரச மரத்தடிச் சந்தியில் சந்தியாக்கிரகம் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் அத்துரலிய ரத்தின தேரர் அறிவித்துள்ளார்

## பேச்சு...

யாளர் மாநாடு ஒன்றில் உரையாற்றியுள்ளார்.

அங்கு அவர் விடுதலைப் புலிகளின் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான நிலைப்பாடு பற்றி தெளிவுபடுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் மக்கள் சமாதான முன் னெடுப்புகள் பற்றி நம்பிக்கை இழந்து வருவதாகவும் தென் னிலங்கையில் சமாதானத் திற்கெதிரான கொள்கைகள் தீவிரம் அடைந்து வருவது பற்றி தனது மனவருத்தத்தையும் தெளிவு படுத்தியுள்ளார்.

மீளச் சமாதான முன்னெடுப்புகள் ஆரம்பிப்பதில் உள்ள தாமதம் உதவி வழங்கும் நாடுகளினால் வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட நிதி எதிர்மறையான அழுத்தத்தை ஏற்படுத்தும் என ஜான் பீற்றர் சன் தனது கவலையை வெளிப்படுத்தியதாகவும் தமிழ்ச்செல்வன் செய்தியாளருக்குத் தெரிவித்தார். சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசை விடுதலைப் புலிகளுடன் உறுதியாகவும் உருப்படியாகவும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக எதிர்க்கட்சிகளினால் வெளியிடப்பட்ட ஆதரவு பற்றி ஜான் பீற்றர்சென் வரவேற்றுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

## முஸ்லிம்....

வடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்நடவடிக்கையினால் சில முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு நேற்றிரவு இந்த விழிப்புணர்வு நடவடிக்கை பற்றி அறிவுறுத்திய பின்னர் விடுதலைப்புலிப் போராளிகள் இவர்களுடன் இணைந்து உணவு உட்கொண்டிருந்த வேளையில் தேசத்துரோகி கருணாவின் கும்பல் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு முஸ்லிம் குடும்பத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இத் துயரச்சம்பவம் குறித்து தளபதி பிரபா அவர்கள் ஓட்டமாவடி முஸ்லிம்களையும், மதத் தலைவர்களையும் சந்தித்து உண்மை நிலையினைத் தெளிவுபடுத்தியுள்ளார். இறந்த முஸ்லிம் குடும்பஸ்தரின் உடல் அவரது உறவினரிடம் கையளிக்கப்பட்டது. இப்பரிதாபகர சம்பவத்தை இட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.